உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தில்லைத் திருப்பதிகங்கள்

குறிப்புரை, விளக்க உரையுடன்



சிறுகூடற்பட்டி


சிவத்திரு அ. சொ. சுப்பையா, எம்.ஏ.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தில்லைத் திருப்பதிகங்கள்

தேவார, திருவாசகத் திரட்டு

சிறு குறிப்புரை, கருத்துரையுடன்
(முதற் தொகுதி)



பதிப்பாசிரியர்
சிறுகூடற்பட்டி
சிவத்திரு அ. சொ. சுப்பையா, எம்.ஏ.

மீனாட்சி பதிப்பகம்
72, மதுரை ரோடு
திருச்சி - 620 008

முதற் பதிப்பு: நவம்பர் 1986

விலை ரூ. 7-50

காணிக்கை

'என்னுடை இருளை ஏறத் துரந்தும்
அடியார் உள்ளத்து அன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பு'மிகு

ஞானகுரு, சைவ சித்தாந்த சரபம்,
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள்
திருவடிகளில் இவ்வெளியீட்டை
உளங்கனிந்த நன்றியுடன்
அன்புக் காணிக்கை யாக்குகிறோம்.

இந்நூல் விற்பனையால் வரும் ஆதாயம்
தில்லைப் பெருங்கோயில் திருப்பணிக்கு உரியது

5-1

உ
சிவமயம்

பொருளடக்கம்

உ

சிவமயம்

முன்னுரை

திருச்சிற்றம்பலம்

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம்
குண(ம்) மிக்கார்

— திருத்தொண்டர் புராணம்

சைவக் கொள்கை: சிவபெருமானையே ஈடு இணை யற்ற முதற்பெருங்கடவுளாகப் போற்றி வழிபடுவது சைவ மரபு. **சிவபெருமான்** தோற்றமும் இறுதியுமில்லா அநாதி முதல்வன்; அவனைப் போன்றே, **உயிர்களாகிய** நாமும், நம்மைக் கட்டுப்படுத்தி நிற்கும் **தளைகளும்** தோற்றமும் இறுதியும் இல்லா அநாதி என்பன சைவ நூல் முடிவு.

சிவபெருமான் திருவருள்: அநாதியாகவே ஆணவ மல பந்தத்தால் கட்டுண்டிருக்கும் உயிர்களைக் கட்டு நீக்கிப் பிறவிப் பெருங்கடலின் கரை ஏற்றுவதே பெரு மானது பேரருள் உள்ளம். அவரது பெருங்கருணையின் வெளிப்பாடே இவ் அண்ட பேரண்டத் தொகுப்பு.

''தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோத (ம்)முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''

— உண்மை விளக்கம்-38

சிவபெருமானது திருநடனமே உலகத்தோற்றம், இயக்கம், ஒடுக்கம் ஆகியவற்றையும், உயிர்களாகிய நமது வினை அனுபவம், முத்திப்பேறு, ஆகியவற்றையும் அருள வல்லது என்பது கருத்தாகும். துடி: உடுக்கை ஏந்திய திருக்கரம். அமைப்பு: அமைந்த திருக்கரம், அபயகரம். அங்கி = தீ ஏந்திய திருக்கரம்.

ஐம்பெருஞ்சபைகள்: எங்கும் நிறைந்த அப்பரம் பொருள் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் திருநடனமிடுகிறது. அங்ஙனம் எங்கும் திருநடனம் நிகழுகிறதென்றாலும், சிறப்பாகப் பேசப்பெறுவன ஐந்து திருத்தலங்களாம். அவை: திருஆலங்காட்டு இரத்தின சபை, சிதம்பரத்துப் பொன்னம்பலம், மதுரையம்பதியின் வெள்ளியம்பலம், திருநெல்வேலித் தாமிரசபை, திருக் குற்றாலத்துச் சித்திரசபை என்பன.

தில்லைச்சிறப்பு: எங்கும் நிறைந்த சிவபரம் பொருளை மெய்யன்புடன் போற்றி வழிபட்டால் முத்தி உறுதி என்பது உண்மை. உயிர்களைப் பேரின்பத்திற்குப் பக்குவப் படுத்துவதற்காகவே, உயிர்களாகிய நமக்கு உடல், உட்கருவி, உலகம், நுகர்ச்சி ஆகியவற்றை அருளித் தந்திருக்கிறார், சிவபெருமான்.

படமாடும் கோயில்களாகிய பரமன் ஆலயங்களையும், நடமாடும் கோயில்களாகிய மெய்யடியார் திருமேனிகளை யும் வீடுபேற்றிற்கான அத்தகைய பயிற்சித் தானங் களாகக் கொண்டு வழிபடுவார்க்கு, இறைவன் நற்பேறு வழங்குகிறான்.

சில சிவாலயங்களைத் தனிப் பெருஞ்சிறப்பு உடையன என்று பேரருளாளர்கள் போற்றிப் பரவியுள்ளனர். திருவாரூரில் பிறக்க முத்தி; காசியில் இறக்க முத்தி; திருவண்ணாமலையை நினைக்க முத்தி; சிதம்பரத்தைத் தரிசிக்க முத்தி என்பது ஆன்றோர் அனுபவம்.

பிறப்பதும் இறப்பதும் நம்கையில் இல்லை.

உள்ளம் ஒன்றி நினைக்கவும் பெருந்தவம் செய்திருக்க வேண்டும்; நினைக்கும் முறைகளை உய்த்து உணர்ந்து நினைக்க வேண்டும்.

ஆணவத்தால் செம்மாந்தனர் அயனும், அரியும்; தரணிக்குத் தலைவன் யார் என்பதில் தருக்கம் எழுந்தது. அவர்தம் செருக்கினை அடக்கத் திரு உளங்கொண்டான், சிவபெருமான். அவ் இருவரும் அண்ண (நெருங்க) முடியாத அனல் பிழம்பாக — **அண்ணுமலையாகப்** பேருருக்கொண்டு, சிவபெருமான் அருள்பாலித்த இடமே திருவண்ணுமலை.

நினைப்போர் உள்ளத்து மல இருளை எரித்து, முத்திப் பேறு அருள, நெருப்பு உருவான திருவண்ணுமலையாலுல் தான் முடியும்.

ஆயினும், பிறவிக்கடலில் அலைமோதித் திரியும் உயிர்களாகிய நம்போன்ருர்க்கு, ஆன்றோர் போன்று, உள்ளம் நெகிழ்ந்து ஒன்றி இருந்து நினைப்பதுவும் அவ்வளவு எளிதாமோ?

பிறப்பதற்கும், இறப்பதற்கும், நினைப்பதற்கும் மட்டுமன்றித் தரிசிப்பதற்குங் கூட அவனருள் வேண்டும். எனினும் ஏனைய மூன்றையும் விடத் தரிசித்து முத்தி பெறுவது எளிதானதேயாகும். உலகளாவிய இப்பெருமையினுல், தில்லையம்பதி தனிச்சிறப்புடையதாகிறது.

சைவர்களால் **கோயில்** எனச் சிறப்பித்துப் போற்றப் பெறுவது சிதம்பரம் ஆகும். ஆங்கு ஆன்மாக்களாகிய நமது உய்வுகருதி, அன்னை **சிவகாமி** முறுவலுடன் திருநோக்கம் செய்து கொண்டிருக்க, எஞ்ஞான்றும் திருநடனம் ஆடியருளுகிருன், கூத்தப் பெருமான்.

நில உலகமெனும் இப்பேருரு நங்கைக்கு இருதயத் தானமாக அமைந்திருப்பது, சிதம்பரம் ஆகும். நாம் உறங்கும்போது உடம்பின்கண் இருதயத்தில்தான் தத்துவங்கள் பலவும் ஒடுங்கி, விழிப்பில் தத்தம் இடங்களை அடைகின்றன. அதேபோன்று பூவுலகிலுள்ள அனைத்துத் தலமூர்த்தங்களும் இரவுக்காலத்தில் சிதம்பரத்தில் தான் வந்து சேர்ந்து வைகறையில் தத்தம் இடம் அடைகின்றன என்பது சாத்திரங்கள் கூறும் உண்மை.

எனவே எங்கும் நிறைந்த பரம்பொருளினது எல்லாத் தல மூர்த்தங்களையும் ஓரிடத்தில் ஒரு சேரத் தரிசிப்பது, சிதம்பர தரிசனத்துச் சிறப்பு என்பதும் அது முத்திப் பேற்றினை நல்கும் என்பதும் உறுதி

நால்வர் பதிகங்கள்: சிவலோகத்திலிருந்து சிவ பெருமானது திரு உளக்கருத்தின்படி, இந்நில உலகிற்கு வந்து திரு அருளையே துணையாகக் கொண்டு சிவப்பணி யால் மக்களை ஈடேற்றிய பெருமக்கள் பலராவர். அவர்களுள் சீர்காழிச் செம்மலாம் திருஞானசம்பந்தரும், முதுபெரும் அருளாளராகிய திருநாவுக்கரசரும், தம் பிரான் தோழரான சுந்தரமூர்த்தியும், தீந்தமிழ்த் திருவாசகம் பாடியருளிய திருவாதவூரடிகளும் தனிச் சிறப்புமிக்க நிறை மொழிமாந்தராவர். அவர்கள் ஆணையிற் கிளந்த மறைமொழிகளே மந்திரம் எனவும், இம்மந்திரமொழிப் பனுவல்களே திருமுறை எனவும் தேவாரம் திருவாசகம் எனவும் போற்றி ஓதப்பெறுபவை.

பதிகப்பயன்: திருமுறைகளை முறையாகக் கற்று ஓதும் வல்லவர்கள், இம்மை வளனையும் மறுமை வாழ் வினையும், அம்மைப் பேரின்பத்தையும் பெறுவர் என்பது சிவ குருமார்களது உறுதி மொழியாகும். பல சான்றோர் களது அனுபவமும் இதுவே.

சித்தாந்த விழுப்பொருட்கள் செறிந்து நிற்கவும் பத்திச்சுவை நனிசொட்டச்சொட்டவும் அமைந்த இத் திருமுறைத் திருப்பதிகங்களை நாளும் ஓதி, உய்வு பெற வேண்டுவது ஒவ்வொருவரது கடமையாகும். ஆலயங் களிலும், இல்லங்களிலும் உள்ளங்களிலும் இவற்றை ஒலிக்கச் செய்தல் சிறந்ததொரு சிவப்பணியாகும்.

இப்பெரும் பணியின் மாண்பினை நன்கு உணர்ந்து சோழப் பேரரசன் இராசராசன் முதலாகச் சைவ மடாலயங்களும், சைவச் சான்றோரும் திருமுறை பற்றி வழிவழியாக ஆற்றி வந்திருக்கும் சிவத்தொண்டு அளப்பரிது.

அவ் ஆன்றோர்தம் அடிச்சுவட்டில், இச்சிறுமதி யேனது சிறு முயற்சியாக, "தில்லைத் திருப்பதிகங்கள்-தேவார திருவாசகத் திரட்டு" என்ற இந்நூல் வெளி வருகிறது. திருவாசகத்தில் உள்ள திருப்பதிகங்கள் ஐம்பத் தொன்று. அவை அருளிச் செய்யப்பெற்ற திருத்தலங்களை, மாணிக்கவாசகப் பெருமான் வரலாறு கூறும் நூல்கள், சிறிது மாறுபடவும் சொல்வதால், திருவாசகத்தில் உள்ள மூன்று பதிகங்கள் மட்டும் இந்நூலின்கண் சேர்க்கப் பெற்றுள்ளன.

நூற்பொருளின் தலையாய பெருமை கருதி, இந் நூற்கண் குறிப்புரை விளக்க உரை முதலியவற்றில் ஏதேனும் குறைகள் காணப்பெறின் அவற்றை ஆன்றோர் பொறுப்பர் என்பது துணிவு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் திரு முறை உரை வெளியீடுகள், இந்நூற் பதிப்பிற்குத் துணையாயிருந்தன. இங்ஙனம் துணைசெய்த தருமை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களுக்கும், உரை

ஆசிரியர்களுக்கும் இவ் எளியேனது உளமார்ந்த நன்றிக் கடப்பாட்டினையும் வணக்கங்களையும் உடைமையாக்குகிறேன்.

பல்வேறு அலுவல்களுக்கிடையே, தம் முதுமைப் பருவத்தின் உடல் தளர்ச்சியையும் மனங்கொள்ளாது, இந்நூலின் கையெழுத்துப் படிகளைத் திருக்கண் ணோக்கி, ஞானத் தெளிவூட்டி ஆசியுரை வழங்கி அருள் பாலித்த அன்புருவாம் எங்கள் ஞான குரு, **சைவ சித்தாந்த சரபம் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்** அவர்களது திருமலரடிகளை மனம், மொழி, மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

முயற்சியைப் பல்லாற்றானும் பாராட்டி, சாற்றுக்கவி தந்து, சிவத்தொண்டில் அடியேனை மென்மேலும் ஊக்குவித்து வரும், முதுபெரும் அருளாளராகிய **திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமி** அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

அச்சுப் பிரதிகளை ஒப்பு நோக்குவதில் உதவிய அன்புத் தம்பி **இராம. சித. சுப்பையா** அவர்களுக்கும், விரைவில் நூலினை வெளியிட்ட **திருச்சி மீனாக்ஷி பதிப்பகத்தார்க்கும்**, குறித்த காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய **சிதம்பரம் மீனாக்ஷி அச்சகத்தார்க்கும்** இதயங்கனிந்த நன்றியும், நல்வாழ்த்துக்களும் உரியன.

திருச்சி
அக்ஷய ஐப்பசி சுவாதி
2—11—1986

அடியார்க்கு அடியேன்,

அ. சொ. சுப்பையா

உ

சிவமயம்

பாலரூவாயர் துணை

ஆசியுரை

சைவ சித்தாந்த சரபம்
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

பரம கருணாநிதியாகிய சிவபெருமான் உயிர்கள் உய்யும் பொருட்டுச் சதாசிவமூர்த்தியாக எழுந்தருளி யிருந்து வேத சிவாகமங்களை முதற் படைப்புக்காலத் தில் அருளித்தந்தார். பின்னர், அவ்வேத சிவாகமப் பொருட்களைத் தென்றமிழ் நாட்டினராகிய நம்மவர் செய்த பெருந்தவப் பயனால் சமயாசாரியர் முதலிய அருளாளர்கள் மூலமாகத் தேவார திருவாசகங்கள் போன்ற அருள் நூல்களின் வழியில் தெளிவுபடுத்தி அருளினர். அவ்வருள் நூல்கள் பல்லாயிரக் கணக்கான பாடல்களுடன் இருந்தும் அவற்றில் பெரும்பகுதி இப் போது நமக்குக் கிடைத்தற்கரியனவாய் மறைந்துவிட்டன. எஞ்சியுள்ள திருப்பாடல்களில் சைவப் பெருமக்களால் "**கோயில்**" என்று வழங்கப்பெறும் சிதம்பரத்திருத் தலத்தைப் பற்றிய தேவார திருவாசகத் திருமுறைப் பதிகங்கள் பதினான்கு, குறிப்புரை, சிறிய அளவில் விளக்கம் ஆகியவற்றுடன் இந்த நூலாக வெளிவருகிறது.

திருமுறைப் பதிகங்களுக்கு நம் அன்புருவாகிய திரு. அ.சொ. சுப்பையா அவர்கள் மரபு வழாத குறிப்பும் விளக்கமும் எழுதியுள்ளார்கள். இவர்கள் திருமுறைகள் சாத்திரங்களை ஊன்றிக்கற்று அவற்றில் ஈடுபடும் உணர்வு மிக்கவர்கள். விதிப்படி மூவகைத் தீக்ஷைகளும்

பெற்று, நியமந் தவருது ஆன்மார்த்த சிவபூஜை அக்கினி காரியம் ஆகியவற்றைச் செய்து வருபவர்கள்.

இந்நூல் கூத்தப் பெருமானது திருவாதிரைத் திரு நாளில் சிதம்பரத்தில் வெளியிடப் பெறுவதறிந்து பெரிதும் மகிழ்வதுடன் இதை வெளியிடுகிற திரு அ.சொ. சுப்பையா அவர்களுக்கு இம்மை நலம், மறுமை வளம் முதலியன சிறந்தோங்க, நம் ஆன்மநாயகராகிய ஸ்ரீ மீனுக்ஷி அம்மையார் சமேத சொக்கலிங்கப் பெருமான் திருவடி களை இறைஞ்சுகின்ருேம்.

இந்த நல்ல நூலைச் சைவ மெய்யன்பர்கள் போற்றிப் படித்துப் புண்ணியம் பெறுவார்களாக.

நலமே தழைக !

உள்ளம் பெருங்கோயில், ஊ(ன்)உடம்(பு) ஆலயம்,
வள்ளல் பிரானுக்கு வாய்,கோ புரவாசல்,
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்,
கள்ளப் புல(ன்)ஐந்தும் காளா மணிவிளக்கே

- திருமந்திரம்

உ
முருகா

வேலை வணங்குவதே வேலை

சாற்றுக் கவி

நேரிசை வெண்பா

தில்லைத் திருமுறைகள் செய்ய குறிப்புரைகள்
எல்லையிலா அன்பால் எழுதினனால் — தொல்லைப்
பிறவித் தளையகற்றும் பீடுசுப் பையா
அறவித் தகமெல்லாம் ஆய்ந்து.

107, சிங்கண்ண செட்டி தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2

அன்பன்
கிருபானந்தவாரி
10—9—86

உ
சிவமயம்

கடவுள் வணக்கம்

கணபதி வணக்கம்

திருச்சிற்றம்பலம்

பிடியத(ன்) உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தன(து)அடி வழிபடு(ம்) அவ(ர்)இடர்
கடிகண பதிவர அருளினன், மிகுகொடை
வடிவினர் பயில்வலி வல(ம்) உறை **இறையே.**

கருத்து : சிவபெருமானே முழுமுதற் கடவுள். அன்பர்க்கு ஈதலையே — ஈதலாகிய கருணையையே தனக்கு வடிவமாகக் கொண்டவன், அவன். உலகெலாம் ஈன்ற அன்னையாகிய உமையவள் பெண்யானையது உருவம் கொள்ள, நம் இறைவனாகிய சிவபெருமான் ஆண் யானை யது வடிவத்தை ஏற்று, சிவனடியாராகிய நமது துன்பங் களைக் களைதற் பொருட்டுக் கணபதி என்னும் பிரணவப் பிள்ளையாரை அருளினன். அப் பெருமான் வலிவலம் என்ற திருத் தலத்தில் எழுந்தருளியுள்ளான், என்பதாம்.

தில்லைக் கூத்தர் துதி*

சீராரும் சதுமறையும் தில்லைவாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழு(து)ஏத்த
வாராரும் கடல்புடைசூழ் வைய(ம்)எலாம் ஈடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு அடிபோற்றி.

சிவகாமசுந்தரி துதி

பரந்(து)எழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியோர்கோன் அமுதுசெயத்
திருமுலைப்பால்
சுரந்(து)அளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

---

*சேக்கிழார் புராணம் - உமாபதிசிவம்

குரு வணக்கம்

பூழியர்கோன்[1] வெப்(பு)[2]ஒழித்த புகலியர்கோன்[3]
கழல்போற்றி;
ஆழிமிசைக் கல்மிதப்பில்[4] அணைந்தபிரான்[5] அடிபோற்றி;
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர்[6] பதம்போற்றி;
ஊழிமலி திருவாத வூரர்[7]திருத் தாள்போற்றி''
— உமாபதி சிவனார்.[8]

சைவசமயக் குரவர்களாகிய நால்வரும், நம் போன்று ஊழ்வினை அனுபவத்திற்காக உலகில் தோன்றிய வரல்லர்; இவர்கள் சிவபெருமானது ஆணை ஏற்றுச் சைவ நெறி தழைத்தோங்கச் செய்ய, திருக்கயிலாயத் திலிருந்து இங்குவந்த பேரருளாளர் ஆவர். இறைவனை நேரே கண்டு, இறை இன்பத்தில் பெரிதும் திளைத்தவர் கள். சிவமாந் தன்மை என்னும் ஞான அனுபவத்தால்' இவர்கள் இயற்றி அருளியவையே தேவார திருவாசகம் என்னும் தெய்வீகப் பனுவல்களாம்.

இறை இன்பப் பேற்றிற்கு நம்மை ஆற்றுப்படுத்தும் இத்திருமுறைகளை அருளிஉதவிய சிவகுருமாரை முதற்கண் வணங்கி, அவர்களது வரலாற்றுக் குறிப்புகளையும் அருள் வெளிப் பாடுகளையும் ஆங்காங்கே சிந்தித்து, நூலினைக் கற்பாம்.

---

1 பூழியர்கோன் — பாண்டியமன்னன், கூன் பாண்டியன்; 2 வெப்பு — சுரம். 3 புகலியர்கோன் — புகலி எனும் சீர்காழியில் தோன்றிய திருஞானசம்பந்தர். 4 கல்மிதப்பு—கல்லாகிய தெப்பம். 5 பிரான்—இங்குத் திருநாவுக்கரசரைக் குறிக்கும். 6 வன்தொன்டர் — சுந்தரர். 7 திருவாதவூரர்—மாணிக்கவாசகர். 8 சேக்கிழார் புராணம்.

உ
சிவமயம்

திருஞான சம்பந்தப் பெருமான்
திருவாழ்வில் நிகழ்ந்த வியத்தகு அருட்செயல்கள்

தில்லைக் கூத்தன் 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் பெருமான் 'திருத்தொண்டர் புராணம்' பாடினர். பெரிய (ர்) புராணமாகிய அம்மாக் கதையிலிருந்து சம்பந்தப் பெருமானது வாழ்வின் அருட் செயல்களை நோக்குவாம்:

மூன்ருண்டு பருவத்தில், திருத்தோணியப்பர் திரு அருளால் உமையம்மை "உண் அடிசில்" என ஊட்ட, சிவஞானத்து இன்னமுதப் பாலை உண்டு "தாவில் தனிச் சிவ ஞானசம்பந்தராயினர்".

(பெரியபுராணம் 54. 66, 68, 69)

சிவ(ன்)அடியே சிந்திக்கும் திருப்பெருகு **சிவஞானம்**
பவ(ம்)அதனை அறமாற்றும் **பாங்கினி(ல்)ஓங்**
கியஞானம்
உவமையிலாக் **கலைஞானம்** உணர்வரிய **மெய்ஞ்ஞானம்**
தவமுதல்வர் **சம்பந்தர்** தா(ம்)உணர்ந்தார் அந்நிலையில்.

— (பெரிய புராணம் 70)

'எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டு' என வெகுண்ட தந்தைக்குத் 'தோடுடைய செவியன்' எனும் தலைப்பை உடைய மெய்ம்மை மொழித் திருப் பதிகம் பாடி, அம்மையப்பனுக விடை ஏறி, மதிசூடிநின்ற சிவபெருமானை எதிர்காட்டினர்.

(பெரிய புராணம் 73, 74, 76)

திருக்கோலக்காவில், சிவபெருமான் திருவருளால் திரு ஐந்தெழுத்து எழுதிய **பொற்றாளம்** பெற்றார்.
(பெரிய புராணம் 103)

திருநெல்வாயில் அரத்துறையில், முத்துப்பல்லக்கு, முத்துக்குடை முதலிய சின்னங்கள் பெற்றார். (216)

சீர்காழியில், தனக்கு மரபுவழி உபநயனம் செய்ய வந்த, வைதிக அந்தணர்களுக்குத் திரு ஐந்தெழுத்தின் பெருமையை எடுத்தோதினார் (பெரிய புராணம்264, 265)

திருப்பாச்சி லாச்சிரமத்தில் கொல்லி மழவன் மகளைப் பற்றியிருந்த முயலகன் என்னும் கொடிய நரம்பு நோயை நீக்கினார். (பெரிய புராணம் 318)

திருக்கொடி மாடச் செங்குன்றூரில் நச்சுக் காய்ச்சலி லிருந்து அடியாரைக் காத்தார் (பெரிய புராணம் 336)

திருப் பட்டீசுரத்தில் முத்துப்பந்தல் பெற்றார்
(பெரிய புராணம் 392,3)

திரு ஆவடுதுறையில் உலவாக்கிழியாக ஆயிரம் பொன் பெற்றார் (பெரிய புராணம் 426)

திருமருகலில், பாம்பு கடித்து இறந்த வணிகனை உயிர்ப்பித்து, மணவாழ்வு நல்கினார் (பெ. பு. 472-483)

திருவீழிமிழலையில், பஞ்சம் போக்கப் பரமனிட மிருந்து படிக்காசு பெற்றார் (பெரிய புராணம் 566)

திருமறைக்காட்டில் (வேதங்களால் அடைக்கப்பட்ட) திருக் கதவினை மூடித் திறக்கும் சீருடையதாக்கினார்
(பெரிய புராணம் 587-589)

திரு ஆலவாய் என்னும் மதுரையம்பதியில், தம் திருமடத்துக்குச் சமணர் வைத்த தீ, "**மன்புறக்கும்**

மெய்ம் முறை வழு'' என மனங் கொண்டு ''பையவே சென்று பாண்டியற் கா'' எனப் பணித்தார் (703,704)

மடத்திற்கு வைத்த தீ, மன்னன் உடலில் வெப்பு நோயாய்க் கனன்றது. திருஞான சம்பந்தர், ''திருவளர் நீறுகொண்டு திருக்கையால் தடவத் தென்னன் ''பொருவரு வெப்பு நீங்கிப் பொய்கையிற் குளிர்ந்தது'' (710-765)

சமணரொடு நிகழ்ந்த அனல்வாதம் புனல்வாதத்தில், சம்பந்தர் நெருப்பினிலிட்ட ஏடு பச்சையாக மிளிர்ந்தது; வைகை ஆற்றினில் இட்ட ஏடு, வெள்ளத்தை எதிர்த்துச் சென்று சைவத்தின் பெருமையை உலகறியச் செய்தது.

சம்பந்தப்பெருமான், கூன்பாண்டியனது கூன்நீக்கி, அவனை நின்றசீர் நெடுமாறனுக்கினர்.

திருஒத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக் கினர். திருமயிலாப்பூரில் தனக்கென வளர்க்கப்பெற்றுச் சில ஆண்டுகட்கு முன் அரவம் தீண்டி இறந்த பூம்பாவை என்னும் பெண்ணின் அத்தியிலிருந்து, அவளை உயிர்ப் பித்து வளர்ந்த உருவினளாக வரவழைத்தார். வீடு பேற்றிற்கும் அவளை ஆற்றுப் படுத்தினர்.

தமக்கும் நம்பாண்டார் நம்பியது திருமகளுக்கும் திருநல்லூர்ப் பெருமணத்தில் நடந்த திருமணத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிவபெருமான் திருவடிப் பேறு அருளுவித்துத் தாமும் இறைமை எய்தினர்.

வியத்தகு செயல்கள் இன்னும் ஏராளம். காலம் இடம் கருதி, சுருங்கிய அளவில் ஒருசிலவே சிந்தித்தோம். ''அருந்தமிழ் ஆ கரர்சரிதை அடியேனுக்(கு) **அவர்பாதம் தரும் பரிசால்** அறிந்தபடி துதிசெய்தேன்...'' எனச் சேக்கிழார் பெருமானே பாடுகிருர். உண்மை அவ் வாறிருக்க, அருளாளரது பெருங்கருணைத் திறத்தை முற்ற உணர்தற்கு நம் சிற்றறிவுக்கு ஏது ஆற்றல்?

திருஞானசம்பந்தர் திருவடிவாழ்க!

உ
சிவமயம்

தில்லைத் (கோயில்) திருப்பதிகங்கள்

முதல் திருமுறை: திருஞானசம்பந்தர்

பண்: குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கற்(று)[1]ஆங் (கு)எரிஓம்பிக்[2] கலி[3]யை வாராமே
செற்றார்[4] வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா[5] வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா(ய்) நின்றாரைப் பற்றா பாவமே 1

கருத்து: தில்லைக் கூத்தனது தூக்கிய திருவடியையே பற்றுக் கோடாகக் கொண்டவர்களைப் பாவங்கள் பற்றா, என்பதாம்.

பறப்பைப்[6] படுத்தெங்கும் பசுவேட்[7](டு) எரிஓம்பும்
சிறப்பர்[4] வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே 2

கருத்து: நடராசப் பெருமானை மறவாதவர்களே மல மயக்கம் நீங்கப் பெறுவர், (எ-ம்).

மையா(ர்) ஒண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையால் பந்தோச்சும் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தா(ன்) உலகேத்தச்
செய்யா(ன்) உறைகோயில் சிற்றம் பலந்தானே 3

---

1 கற்று; வேத சிவாகமங்கள் முதலிய உயர்ந்த அருள் நூல்களை ஐயந்திரிபின்றிக் கற்று 2 எரிஓம்பி: சிவ ஞானக்கினியாகிய ஓமவேள்வியை நாளும் போற்றி 3 கலி-தீவினை 4 செற்றார்:- செறிந்த ஞானமுடைய தில்லைவாழ் அந்தணர் 5 முற்றா வெண்திங்கள்: (முற்றாத) பிறைச்சந்திரன் 6 பறப்பை - வேள்விச்சாலை 7 பசுவேட்டு ஆகுதிப்பொருட்களை வேள்விக் குண்டத்தில் சேர்த்து

கருத்து: நான்மறைகளை விரும்பிய சிவபெருமான் உலகினர் போற்றிவழிபட உறையும் கோயில் சிற்றம் பலமாகும், (எ-ம்)

நிறைவெண் கொடிமாடம் நெற்றி நேர்தீண்டப்
பிறைவந்(து) இறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண்(டு) அறைஓவாச்[1] சிற்றம் பலமேய
இறைவன் கழல்ஏத்து(ம்) இன்பம் இன்பமே 4

கருத்து: அனைத்து இன்பங்களையும் விட, அம்பலத்தரசன் திருவடி ஏத்தும் இன்பமே உயர்ந்த பேரின்பமாகும்.

செல்வ நெடுமாடம் சென்று சேண்[2](ஓ)ங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழல்(ஏ)த்தும் செல்வம் செல்வமே 5

கருத்து: அனைத்துச் செல்வங்களிலும் உயர்ந்த பெருஞ் செல்வமாவது எல்லாச் செல்வங்களுக்கும் தலைவனுகிய நடராசன் திருவடியைத் தொழுது ஏத்துதலே (எ-ம்).

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந்[3] தில்லையுள் சிற்றம் பல(ம்)மேய
கருமா(ன்) உரியாடைக் கறைசேர் கண்டத்(து)எம்
பெருமான் கழல்(அ)ல்லால் பேணு(து) உள்ளமே 6

கருத்து: மாந்தளிர் போன்ற மேனியுடைய உமையவளை ஒருபாகத்தில் கொண்டவன்; திருமகள் தங்கியிருக்கும தில்லைச் சிற்றம்பலத்தில் திருநடனமிடுபவன்; புலித்தோலை ஆடையாகக் கொண்ட அத்தில்லைத் திருநீலகண்டனது திருப்பாதம் அல்லால் வேறொன்றையும் எனது உள்ளம் பேணுது (எ-ம்)

---

1 அறை-ஒலி
2 சேண்-வெளி, ஆகாயம்
3 திருமா–திருமகள்

அலையார் புனல்சூடி ஆகத்(து) ஒருபாகம்
மலையான் மகளோடும் மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால்[1] எயில்[2](எ)ய்தான் சிற்றம் பலம்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே 7

கருத்து: சிற்றம்பலத்தைத் தலையால் வணங்குபவர்களே தலையாயவராவர், (எ-ம்)

கூர்வாள் அரக்கன்தன்[3] வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடை[4]யானை நித்தல் ஏத்துவார்
தீரா நோ(ய்)எல்லாம் தீர்தல் திண்ணமே 8

கருத்து: சிதம்பர நாதனை நாள்தோறும் ஏத்துவார்க்குத் தீராத நோயெல்லாம் தீரும் (எ-ம்)

கோண்நா க(அ)ணையானும் குளிர்தா மரையானும்
காணார் கழல்ஏத்தக் கனலா(ய்) ஓங்கினான்
சேணார்[5] வாழ்தில்லைச் சிற்றம் பலம்(ஏ)த்த
மாணா[6] நோ(ய்)எல்லாம் வாளா மாயுமே 9

கருத்து: சிற்றம்பலத்தான், திருமாலும் பிரமனும் அடி முடி காணமுடியாத, நெருப்புப் பிழம்பென ஓங்கிநின்ற அண்ணாமலையான் ஆவன். அவனை வணங்கினால் மிகப் பெரிய நோய்களுங்கூட வெறுமே அழிந்து ஒழியும் (எ-ம்)

பட்டைத் துவர்[7]ஆடைப் படிமம்[8] கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர்[9] வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே 10

---

1 சிலை:-மேரு மலையாகிய வில்; 2. எயில்; வலிய அரக்கர், ஆகாயத்தில் கட்டிய பொன், வெள்ளி இரும்பினாலான மூன்று கோட்டைகள் 3. கூர்வாள் அரக்கன்-இராவணன் 4 நீர் ஆர்சடை-கங்கையைத் தாங்கிய சடை 5 சேணார்-தேவர்கள் 6 மாணா-மாண்பு இல்லாத 7 பட்டைத்துவர் -காவி; 8 படிமம்-நோன்பு; 9 சிட்டர்-சீலம்மிக்கவர்

கருத்து: புறச்சமயத்தவர் பொருந்தா மொழி கூறித் திரியும் புல்லறிவாளராவர். அவர்களது தீயகருத்துக்களைக் கேளாது ஒதுக்கி, தில்லை நடராசனது திருவடிகளையே நாளும் தொழுவோம் (எ-ம்)

ஞாலத்(து) உயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச்[1] சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தால்பாட வல்லார் நல்லாரே 11

கருத்து: சீர்காழி வேந்தனுகிய திருஞான சம்பந்தன், சிற்றம்பலத்து அரசனை ஏற்றிப் பாடிய இத்திரு நெறிய தமிழ்ப் பாமாலையை இசையுறப் பாடவல்லவர்கள் நல்லவர்கள் ஆவர் (எ-ம்).

திருச்சிற்றம்பலம்

மூன்றாந் திருமுறை : திருஞானசம்பந்தர்.

பண் : காந்தார பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

ஆடினாய்,நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினா(ய்)இடமா, நறுங்கொன்றை நயந்தவனே
பாடினா(ய்)மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினா(ய்)அருளாய், சுருங்க எம தொல்வினையே. 1

கருத்து : பால், தயிர், நெய் மூன்றையும் ஆட்டப் பெறுபவன், சிவபெருமான். பிரணவத்திற்குத் தானே உரியவன் என்பதை உணர்த்த, பிரணவ வடிவான

---

1 சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம்-சீலம் மிக்கவர்கள் தமக்குப் புகலிடமாகக் கொள்ளுகிற சிற்றம்பலம்

கொன்றை மாலையை அணிந்தவன்; சந்திரப் பிறை சூடியவன்; சாமகானம் இசைப்பவன்; தில்லைச் சிற்றம் பலத்தைத் திருக்கூத்தாடும் ஞானவெளியாகக் கொண்டவன். (எ-ம்)

கொட்ட[1]மேகம ழும்குழ லாளொடு
கூடினாய்,எரு(து) ஏறினாய்,நுதல்
பட்டமேபுனைவாய், இசைபாடுவ பாரிடமா[2]
நட்டமேநவில்வாய்[3] மறையோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற் றம்பலம்
இட்டமா உறைவா(ய்) இவை
மேவிய(து)என்னைகொலோ 2

கருத்து: பெருமானே! நீ சிவகாமி அம்மையொடு கூடியவன்; எருது ஏறியவன்; வீரர் அணியும் நெற்றிப்பட்டை அணிபவன்;பூதகணங்கள் இசைபாட,திருக்கூத்தாடுபவன்; சிற்றம்பலத்தை விரும்புபவன். இவ்வைந்து செயல்களுக்குமான காரணத்தை அடியேங்களுக்குக் கூறியருளுக.

நீலத்(து)ஆர்கரிய மிடற்றார்நல்ல
நெற்றிமேல்உற்ற கண்ணினார்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீ(று)அணி வார்சடையார்
சீலத்தார் தொழு(து) ஏத்துசிற்றம்பலம்
சேர்தலால்கழல் சேவடிகைதொழக்
கோலத்தா(ய்)அரு ளாய்உன காரணம் கூறுதுமே. 3

கருத்து திருநீலகண்டன், நெற்றிக்கண்ணினன்; திரிசூலம் ஏந்தியவன்; சுடலைப்பொடி பூசியவன்; செஞ்சடையினன்; (எ-ம்)

"கொம்(பு)[4]அலைத்(து)அழ (கு)எய்திய நுண்இடைக்
கோலவாள்மதி போலமுகத் (து)இரண்டு

---

1 கொட்டம் — நறுமணம். 2 பாரிடம் — பூதங்கள்.
3 நவில்தல் — பழகுதல் 4. கொம்பு — பூங்கொம்பு

அம்(பு)அலைத்தகண்ணாள் முலைமேவிய வார்சடை
கம்பலை[1]த்(து) எழு காமுறு காளையர் [யான்
காதலால்கழல் சேவடி கைதொழ
அம்பலத்(து)உறை வான் அடியார்க்(கு)
அடையாவினையே 4

கருத்து : சிவகாமி அம்மையது நுண்ணிடைக்குப் பூங்கொம்பும் இணையாகாது திருக்கண்களுக்குக் கூரிய அம்பும் இணையாகாது. அவளது மார்பகத்தை மருவியவனும், தில்லை அம்பலத்துள் திருநடனமிடுபவனுமாகிய நடராசப் பெருமானது திருவடிகளைப் பற்றிநிற்க, வினைகள் வாரா, (எ-ம்)

தொல்லையார்அமு(து) உண்ண நஞ்சு(உ)ண்டதோர்
தூமணிமிட று![2]பகுவாயதோர்[3]
பல்லைஆர்தலை யில்பலிஏற்று(உ)ழல் பண்டரங்கா!
தில்லையார் தொழு(து) ஏத்து சிற்றம்பலம்
சேர்தலால் கழல் சேவடி கைதொழ
இல்லையாம்வினை தான்(எ)ரியம்மதில் எய்தவனே! 5

கருத்து : தேவர்கள் அமுதம் உண்ணுதற்காகத் தான் கருணை மிகுதியால் ஆலகால நஞ்சினை உண்டு, நீலகண்டன் ஆனவன்; மண்டைஓட்டில் பிச்சை ஏற்பவன்; முப்புரம் எரித்தவன்; அவனது திருவடி தொழுது வர, வினைகள் நீங்கும். (எ-ம்)

ஆகம்[4]தோய்அணி கொன்றையாய், அனல்
அம்கையாய்அம ரர்க்(கு)அமரா உமை

---

1 கம்பலை — ஓசை. இங்கு, தில்லைவாழ் அந்தணர்கள் இறைவனைத் துதித்தும், பாடியும், புகழ் பாராட்டியும் எழுப்புகிற ஓசையாம்.
2 மிடறு — கண்டத்தை உடையவனே!
3 பகுவாய் — பிளந்தவாய்.
4 ஆகம்—திருமேனி,

பாகம்தோய்பகவா[1] பலிஏற்றுஉழல் பண்டரங்கா
மாகம்[2]தோய்பொழில் மல்குசிற்றம்பலம்
மன்னினுய்மழு வாளினுய் அழல்
நாகம்தோய் அரையாய் அடியாரை நண்ணு வினேயே. 6

கருத்து: வான் அளாவிய, வளம் நிறைந்த சோலேகள் மிகுந்தது தில்லேயம்பதி. அங்கு, கொன்றை மலரணிந்த மார்பினனுய், அனல் ஏந்திய கையினனாய், உமையொரு பாகத்தனுய், அனேத்துச் செல்வங்கட்கும் அதிபதியாய்த் திகழ்பவன், சிவபெருமான். விடநாகத்தைக் கச்சை யாகக் கட்டி, ஞானவெளியில் திருநடம் புரியும் அவனே வணங்க, ஊழ்வினேகள் உருக்கொள்ளா (எ-ம்).

சாதிஆர்பளிங் கின்னொடுவெள்ளிய
சங்கவார்குழை யாய்திகழப்படும்
வேதியாவிகிர்தா[3] விழ(வு)ஆர்அணி தில்லேதன்னுள்
ஆதியாய்க்(கு)இடம் ஆய சிற்றம்பலம்
அம்கையால்தொழ வல்அடியார்களே
வாதியா(து)அகலும் நலியா,மலி தீவினேயே 7

கருத்து: உயர்சாதிப் பளிங்கினே ஒத்த வெண்சங்கினு லாகிய காதணி உடையவன் சிவபெருமான். அவனே வணங்கும் அடியார்க்குத் தீவினேகள் எதிர்ப்பட்டுத் துன் புறுத்தா (எ-ம்)

வேயி(ன்)ஆர்[4]பணேத் தோளியொடுஆடலே
வேண்டினுய்விகிர்[3]தா! உயிர்கட்(கு)அமு(து)
ஆயினுய்,இடு காட்(டு)எரியாடல் அமர்ந்தவனே
தீயி(ன்)ஆர்கணேயால் புர(ம்) மூன்(று)எய்த
செம்மையாய்திகழ் கின்றசிற்றம்பலம்
மேயினுய்கழ லேதொழு (து)எய்துதும் மேலுலகே 8

---

1 பகவா—ஐசுவரியம், வீரியம், ஞானம், புகழ், திரு, வைராக்கியம் ஆகிய ஆறு குணங்களேயும்உடைய பகவனே
2 மாகம்தோய்—ஆகாயத்தை அளாவிய பொழில்,சோலே.
3 விகிர்தா—வேறுபாடில்லாதவன். 4 வேய்—மூங்கில்.

கருத்து : காளியொடு திருக்கூத்தாடிய விகிர்தன்; அடியவர்க்கு அமுதம் ஆனவன்; அக்கினிதேவனையே கூரிய அம்பின் முனையாகக் கொண்டு திரிபுரம் எரித்தவன்; அவனது திருவடியையே வணங்கிச் சிவலோகம் அடைவோம் (எ-ம்).

தாரி(ன்)ஆர்விரி கொன்றையாய்மதி
தாங்குநீள்சடை யாய்தலைவா, நல்ல
தேரி(ன்)ஆர்மறுகின் திருவா(ர்)அணி தில்லைதன்னுள்
சீரினல்வழிபா(டு) ஒழியாததோர்
செம்மையால்அழ காயசிற்றம்பலம்
ஏரினல்அமர்ந்தாய் உனசீரடி ஏத்துதுமே! 9

வெற்(று)அரைஉழல்வார்[1] துவர்ஆடைய(ர்)
வேடத்தா(ர்)அவர்கள் உரைகொள்ளன்மின்
மற்(று)அவ(ர்)உலகின் அவலம்அவை மாற்றகில்லார்
கற்றவர்தொழு(து) ஏத்துசிற்றம்பலம்
காதலால்கழல் சேவடிகைதொழ
உற்றவ(ர்)உலகின் உறுதிகொள வல்லவரே 10

கருத்து : ஆடையில்லாத சமணர் முதலிய புறச்சமயவாதிகள், கூறுகிற தெளிவற்ற தீயகருத்துக்களைக் கொள்ளாதீர். அவர்கள், உலகஅவலங்களாகிய தீமையிலிருந்து உங்களைக் காக்க வல்லவரல்லர். சிவாகமங்களைக் கற்று, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற் பாதங்களிலும் வல்ல சைவப்பெருமக்கள் தொழுது ஏத்துவது சிற்றம்பலமாகும். அவ்வாறு வணங்கும் அன்பர்களே, உலகில் மானிடப் பிறவியில் பிறந்த பயனை அடைய வல்லவர் ஆவர். (எ-ம்)

நாறுபூம்பொழில்[2] நண்ணிய[3] காழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்

---

1 வெற்று அரை உழல்வார்-ஆடையில்லாத சமணர்.
2 நாறுபூம்பொழில் — மணம் கமழும் பூஞ் சோலைகள்.
3 நண்ணிய—பொருந்திய.

ஊறும்இன்தமிழால் உயர்ந்தார்உறை தில்லைதன்
ஏறுதொல்புக(ழ்) ஏந்து[1]சிற்றம்பலத்(து) (னுள்
ஈசனைஇசையால் சொன்ன பத்(து)இவை
கூறுமாறுவல்லார் உயர்ந்தா[2] ரொடுங்கூடுவரே. 11

கருத்து : சீர்காழிச் செம்மலாகிய திருஞான சம்பந்தர் நான்கு வேதங்களிலும் வல்லவர். அவர், தில்லைக் கூத்தனை தீந்தமிழ் இசையால் சொன்ன இப்பாடல்கள் பத்தினையும் கூறவல்லவர்கள் உயர்ந்தாரொடு கூடி இன்புறுவர் (எ-ம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் திருவாழ்வில் நிகழ்ந்த வியத்தகு அருட்செயல்கள்

திருநாவுக்கரசர் சைவத்தில் மருள்நீக்கியாராகப் பிறந்தவர். சமணம் புகுந்து தருமசேனர் என்ற பெயருடன் தருக்கங்கள் புரிந்து தலைமையில் திகழ்ந்தவர்.

தம்பி, சைவத்திற்குத் திரும்பவேண்டு மென்பது தமக்கையான திலகவதியாரது தணியா வேட்கை எனவே சிவபெருமான் அவருக்குக் கொடிய சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டார்.

2 சூலை நோயும் சமணப் பற்றும் நீங்கித் தாய்ச் சமயமாம் சைவ நெறி புகுந்தார்.

3 ''பாவுற்றுஅலர் செந்தமிழ் இன் சொல்வளப் பதிகத்தொடை பாடிய பான்மையினுல், **நாவுக்கரசு** என்று உலகு ஏழினும் நின் நன்னுமம் நயப்புற மன்னுக'' என்று வானிடையே யாவரும் கேட்ப அருள்வாக்கு

---

1 புகழ்ஏந்து—புகழைத் தாங்கிய

2 உயர்ந்தார்—தேவர், சிவகணங்கள்.

எழுந்தது. அது முதல் திருநாவுக்கரசு என்னும் அவரது திருநாமம், மந்திர மொழியாய் உலகெங்கும் பரவியது இறைவனது திருவருளை நினைந்து, அடிகள் தீந்தமிழ்ப் பாமாலைகள் சூட்டினார்.

4 தீய சமணர்கள், பல்லவ மன்னனைத் தூண்டி அடிகளைக் கொல்லச் சூழ்ச்சிகள் பல செய்தனர். நீற்றறையில் இட்டனர்; அடிகள் சிவபெருமான் திருவடி நிழலையே நினைந்து ஏழுநாட்கள் நீற்றறையின் உள்ளே இன்புடன் இருந்தார்.

5 பின்னர், சமணர்கள் நஞ்சுகலந்த பால்சோற்றை, உண்ணச் செய்தனர்; அதனை அருந்தியும் அடிகள் அமுதுண்ட ஆனந்தத்தோடு இருந்தார்.

6 பகைவர்கள் கொடிய யானையை அவர் மீது ஏவினர்; அது பாகனையும் சமணரையும் வெருட்டி, நம் அண்ணலை வணங்கிப் போயிற்று.

7 நாவுக்கரசரைக் கற்பாறையில் கட்டிக் கடலில் பாய்ச்சினர்; கல்லே தெப்பமாகி அடிகளைக் கரை சேர்த்தது.

8 சமணனாயிருந்த பல்லவ மன்னன் சைவத்தின் பெருமை உணர்ந்தான்; சைவனாகிச் சிவாலயங்கள் பல எழுப்பியும் சிவ புண்ணியங்கள் பலப்பல செய்தும் பெருஞ் சிவத் தொண்டனாக மாறினான்.

9 திருத்தூங்கானை மாடத்தில், அடிகள் சிவ பெருமான் அருளால் திரிசூல, இடப இலச்சினைகளைத் தம் திருத் தோள்களில் பொறிக்கப் பெற்றார்.

10 திருநல்லூரில், சிவபெருமானது திருவடி, தம் தலைமேல் வைத்தருளப் பெற்றார்.

11 திங்களூரில் நச்சரவு தீண்டி இறந்த அப்பூதியடிகளது மகன், மூத்த திருநாவுக்கரசை இறையருளால் உயிர்ப்பித்தார்.

12 திருவீழிமிழலையில், சிவபெருமானிடமிருந்து படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தார்.

13 திருமறைக் காட்டில் வேதங்கள் திருக்காப்பிட்ட மறைக்கதவம் திறக்கப் பாடினர்.

14 திருப்பைஞ்ஞீலியில் நாவுக்கரசருக்குச் சிவபெருமான் பொதிசோறும் தண்ணீரும் தந்தருளினர்.

15 திருவையாற்றில், அடிகள் திருக்கயிலைக்காட்சி கண்டு இன்புற்ருர்.

16 திருப்பூந்துருத்தியில் திருஞானசம்பந்தரது திருச்சிவிகை தாங்கி உயர்ந்தார்.

17 திருப்புகலூரில் உழவாரத் தொண்டு செய்யுங்கால், இடைப்பட்ட செம்பொற் குவையையும் நவமணியையும், ஓடாகவும் கல்லாகவும் மதித்து வீசி எறிந்தார்.

18 மயக்கி நின்றனர் தேவமகளிர்; இறைவனிடம் முறையிட்டு அவர்களை அகலச் செய்தார்.

19 சித்திரைச் சதயத் திருநாளில் திருப்புகலூரில் சிவானந்த ஞானவடிவாம் முத்திப் பேறு பெற்ருர்.

எண்ணற்றன, அப்பரடிகள் வாழ்வின் அருட்செயல்கள்; அவற்றுள் காலம் இடம் கருதி, ஈண்டு சிலவற்றை மட்டுமே சிந்திக்கும் பேறு பெற்றனம்.

நற்றுணையாவது நமச்சிவாயவே!

உ
சிவமயம்

நான்காம் திருமுறை - திருநாவுக்கரசர்.

பதிக எண்—22

பதிகச் சிறப்பு : நடராசப் பெருமானது எரியாடும் மாண்பினை அப்பரடிகள் இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் வியந்து போற்றுகிறுர்

1 ஒவ்வொரு பாடல் முதலடி ஈற்றிலும், நிலா சூடிய சிவபெருமானது திருமுடி சிந்திக்கப் பெறுகிறது.

சிவபெருமானே தன்னுள் அனைத்தையும் ஒடுக்கிக் கொள்ளவல்ல முழுமுதற் கடவுள். ஆயினும், தன் திருவடியில் அடைக்கலம் புகுந்த அடியவரைச் சிரமேல் அணிந்து கருணை புரிபவனும் அவனே என்பது இதனுல் குறிப்பாக உணர்த்தப் பெறுகிறது.

2 மூன்ரும் அடிகள் தோறும், தில்லைப்பதியின் வளமும் சிற்றம்பலத்துச் சிறப்பும் பெரிதும் பாராட்டப் பெறுகின்றன.

3 எல்லாப் பாடல்களின் ஈற்றடியிலும் ''எரிஆடுமாறே'' என்ற சொல்லாட்சி அமைந்துள்ளது

ஆளுடைய அரசு, ஆடலரசனது ஊன நாடகத்தையும் ஞானநாடகத்தையும், சீவன்முத்த நிலையிலிருந்து அனுபவித்த பெற்றியினையும், அந்நிலைக்கு உயர, ஒவ்வொரு ஆன்மாவும் கொள்ளவேண்டிய நெறியினையும் ஈண்டு சிறிதேனும் சிந்திப்பது கடமை.

எரியினது சிறப்பு : சிவபெருமான் எரியாடி; எரி என்பது எரிகின்ற நெருப்பு.

சிவபெருமானது **நெற்றிக்கண்** நெருப்பு, காமவேளை எரித்தது; கந்தவேளைத் தோற்றுவித்தது.

அவனது திருமுறுவலாகிய **உதட்டு நெருப்பு**, முப்புரத்தை எரித்தது; மூவசுரரையும் தேவரையும் காத்தது.

அவனது **இடக்கரம்** ஏந்திய நெருப்பு, அண்டத் தொகுப்பையே அழிக்கவல்ல ஊழியைத் தோற்றுவிப்பது.

அவனது **திருமேனி**யாகிய நெருப்பு, தருக்குற்ற மால், அயனும் தம்பால் நெருங்க வொண்ணு அனற்பிழம் பாய்த் தகிக்கும் தன்மையது.

அவன் நள்ளிருளில் நட்டமிடும் **சுடலை நெருப்போ** உயிரது மலநோயை எரித்துப் பிறந்த பிறப்பறுக்கும் பெற்றியது.

ஆடும் களம்: ஒவ்வொரு ஆன்மாவினது துவாத சாந்தத்திலும் (தலைக்கு மேல் பன்னிரண்டு அங்குல உயரத்தில்) சிவபெருமான் இடையருது திருநடன மிடுகிருன்.

அவனது அண்டவெளித் திருநடனம், பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய மெய்யடியார் பொருட்டு, தில்லைச் சிற்றம் பலத்தில் காட்டப் பெற்றதற்கு வரலாறு உண்டு.

அண்டத்து ஆடலையும், அம்பலத்து ஆடலையும் பிண்டத்துள்ளும் கண்டு உயிர்த்தவர்களே பேரருளாள ராவர். அப்பர் பெருமானது (5 : 1 : 10) திருப்பாடல் இதற்குச் சான்று பகரும்.

திருமாலும் அயனும் காணவொண்ணு ஆட்டம், சிவபெருமானது **அண்டவெளி** அனலாட்டமாகும். தில்லைக்காட்சியாக அவன் திருவருள் பாலித்தது, **அம்பலத்து** ஆட்டமாகும். அடியரது அன்பு உள்ளத்தில்

மகிழ்ந்து நின்று அவன் ஆடுவது, **இதயத்துள்** நிறைந்த ஆட்டம். மூன்றையும் ஒருசேரக்கண்ட பேருவகையை அப்பரடிகளது ஒரே பாடலில் காணுகிறோம். *(5:1:10)*

இவ்வாறு மூவிடத்திலும் ஒருசேரச் சிவநடனத்தை காணுதலும், அவனது திருக் கூத்தொலியைக்கேட்டலுமே **சிவமாந்தன்மை, சிவப்பேறு** என்றெல்லாம் சிறப்பாக அழைக்கப் பெறும் பேரின்பமாகும்.

ஆன்மா கொள்ளவேண்டிய நெறி: ஆன்மாக்கள் இவ்வாறு சிவகதி அடைவதற்கான நுண்ணிய, பொருள் பொதிந்த, எண்ணற்ற நெறிமுறைகளைச் சைவ சாத்திரங்கள் மிகத் தெளிவாக அறிவுறுத்துகின்றன. அவற்றுள் ஒன்றினை மட்டும் இங்குச் சிந்திப்போம்.

சிவாநுட்டானம் செய்யும் மெய்யடியார்கள் ஒரு நிலையில், மந்திர சொரூப நீரினைப் பாவனையால் இடது மூக்குவழி உள்ளிழுத்து இவ்வுடலினுள் சேர்கின்ற பாவங்களைக்கழுவி வலது மூக்கு வழி வெளிக்கொணர்ந்து புருவநெறிப்புடன் வலது கால் பெருவிரலில் விடுவர். இதற்கு அக(ம்)மர்ஷணம் என்பது பெயர்; பாவங்களைக் கெடுத்தல் என்பது பொருள்.

வலது இடது கண்கள் சூரிய சந்திரர் எனவும், நெற்றியில் உள்ள கண் நெருப்பு எனவும், கால்பெருவிரலிலுள்ள நெருப்பு காலருத்ராக்கினி எனவும் 'சிவநெறி விளக்கம்' கூறுகிறது.

நெற்றிக்கண் என்பது மெய்யடியாரது புருவ நடுவுக்கும், உச்சித்தலையிலுள்ள நுண்செவிக்கும் இடைப்பட்ட பகுதி. பயிற்சியால் தேர்ச்சியுற்ற அடியவரது புருவச் சுழிப்பு, அவரது உச்சித் தலையிலுள்ள நுண்ணிய எரி வாயைத் திறக்கும். உச்சி திறக்கவே, உள்ளங்கால் பெரு விரலிலும் காலருத்ராக்கினி விரைந்து எழ, அவ் அக்கினி

யில் அடியவரது பாவங்கள் எரித்துப் பொசுக்கப் படு கின்றன. சிவானுட்டானத்தின் மூலம், இவ்வாறு மும் மலங்கள் ஒடுங்குகின்றன என்ற உண்மை, கடவுள் உண்மையை ஒக்கும்.

நவீன விஞ்ஞான நோக்கு: உச்சித்தலையில் மூளைப் பகுதியிலுள்ள PINEAL BODY என்ற உறுப்பு, பால் உணர்வினை ஊக்குவிப்ப தென்பதையும், அதற்கும் உள்ளங்கால் பெருவிரலுக்கும் தொடர்பு உண்டு என் பதையும் நவீன விஞ்ஞானமும் சரியாகவே ஆராய்ந்து கூறியுள்ளது.

உச்சித் தலையிலுள்ள நுண்செவியால் கேட்கப்படும் சிவநாதம், நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்பான மீஒலி (ULTRA SOUND)யை விட, பலகோடி மடங்கு நுண்ணிய ஆற்றலுடையது.

சிவநாதத்தைச் **சேரமான் பெருமான் நாயனார்** போன்ற அருளாளர்கள் கேட்டு இன்புற்றனர் என்பதைச் சைவ வரலாறுகள் செவ்விதே கூறும்.

அகத்திணையில், தலைவனாகிய ஆண்டவன், தலைவி யாகிய ஆன்மாவைப் புணர்ந்து இன்புறுத்தும் இடம், தலையின் முன்பகுதியே. (இதன் அறிவியல் அடிப்படையி லான இலக்கண விளக்கத்தை, எமது அடுத்த வெளியீடுக ளான, **மருதநிலத்து மங்கை** என்னும் 'தொல்காப்பியப் பொருள்' நூலிலும், **கடவுள் ஒருவரா, பலரா?'** என்ற கட்டுரைத் தொகுப்பு நூலிலும், **'உடலியலும் இறை யியலும்'** என்ற ஒப்புநோக்கு நூலிலும் காண்க.)

காட்சிக்குப் புருவநடு; கேள்விக்கு உச்சித்தலை என்ற அமைப்பிலேதான், சிவபெருமான் திருவருளால், நால்வர் பெருமக்கள் முதலிய அனைத்து அருளாளர்களும்

சிவபெருமானை நேரில்கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களது அனுபவ வெளிப்பாடுகளே, இன்று நாம் கொள்ளவேண்டிய அனுட்டானப் பயிற்சி முறையாகும். இப் பயிற்சிமுறைகள் நவீன விஞ்ஞானத்திலும் பெரிதும் பொருந்தி வருவதை அறிஞர் ஏற்பர்.

நான்காம் திருமுறை - திருநாவுக்கரசர்

பதிக எண்: 22 பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

செஞ்சடைக் கற்றைமுற்றத்(து) இளநிலா
எறிக்கும்சென்னி
நஞ்(சு)அடை கண்டனாரைக் காணலா(ம்);
நறவ(ம்)[1] நாறு(ம்)
மஞ்(சு)அடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்(சு)அடை இருள்கிழியத்[2] துளங்(கு)எரி ஆடுமாறே 1

கருத்து: தில்லைச் சிற்றம்பலத்தே சிவபெருமான், தன்செஞ்சடைக் கற்றையில் இளநிலா வீசவும், கழுத்தில் கொடிய நஞ்சு தங்கவும், வானளாவிய சோலையின் நறுந்தேன் மணம் வீசவும், ஆணவமாகிய இருள் துஞ்சவும், ஞானத்தீயைத் தன் திருக்கரத்து ஏந்தித் திருநடமிடுவதைக் காணலாம்.

ஏறனு(ர்)[3] ஏறுதம்பா(ல்) இளநிலா எறிக்கும்சென்னி
ஆறனு(ர்)[4] ஆறுசூடி ஆயிழை யா(ள்)ஓர்பாக(ம்)
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறு[5]மெய் பூசிநின்று நீண்(டு)எரி ஆடுமாறே 2

1. 1 நறவம் - தேன். 2 கிழிதல் - மறைதல்.
2. 3 ஏறனுர் - ஆண்சிங்கத்தை ஒத்தவர், விடை ஏறுதலுடையவர். 4 ஆறனுர் - கங்கை சூடியவர்
5 நீறு - திரு நீறு.

சடையனூர் சாந்தநீற்றர் தனிநிலா எறிக்கும்சென்னி
உடையனு(ர்) உடைதலையி(ல்) உண்பதும் பிச்சை ஏற்றுக்
கடிகொள்பூந் தில்லைதன்னுள் கருதுசிற் றம்பலத்தே
அடிகழ(ல்) ஆர்க்க[1]நின்று அனல்எரி ஆடுமாறே 3

பைஅர(வு) அசைத்தஅல்குல் பனிநிலா எறிக்கும்சென்னி
மையரிக் கண்ணினளு(ம்) மாலு(ம்)ஓர் பாகமாகிச்
செய்யரி தில்லைதன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
கைஎரி வீசிநின்று கன(ல்)எரி ஆடுமாறே 4

ஓதினூர் வேதம்வாயா(ல்) ஒளிநிலா எறிக்கும்சென்னிப்
பூதனூர் பூதம்சூழப் புலிஉரி அதள[2]னூர்தா(ம்)
நாதனூர் தில்லைதன்னு(ள்) நவின்றசிற் றம்பலத்தே
காதில்வெண் குழைகள்தாழக் கன(ல்)எரி ஆடுமாறே 5

ஓ(ர்)உடம்(பு)[3] இருவ(ர்)ஆகி ஒளிநிலா
எறிக்கும்சென்னிப்
பாரிடம்[4] பாணிசெய்யப் பயின்றஎம் பரமமூர்த்தி
கா(ர்)இடம் தில்லைதன்னுள் கருதுசிற் றம்பலத்தே
பே(ர்)இடம் பெருக[5]நின்று பிறங்(கு)எரி ஆடுமாறே 6

முத(ல்)தனிச் சடையை மூழ்கமுகிழ்நிலா
எறிக்கும்சென்னி
மதக்களிற்(று) உரிவைபோர்த்த மைந்தரைக்
காணலாகு(ம்)
மதர்த்துவண்(டு) அறையும்சோலை மல்குசிற் றம்பலத்தே
கதத்த[6](து)ஓ(ர்) அரவ(ம்)ஆடக் கன(ல்)எரி
ஆடுமாறே 7

3.1 ஆர்க்க - ஒலிக்க. 5. 2 அதள்-தோல். 6.3 ஓர் உடம்பு-அர்த்தநாரீச்சுர வடிவம். 4 பாரிடம்-பூதகணம்.
5 பேரிடம்பெருக - அகண்டமாய் வளர.
7. 6 கதம்- கோபம்

மறையனூர் மழுஒன்(று)ஏந்தி மணிநிலா
எறிக்கும்சென்னி
இறைவனூர் எம்பிரானு(ர்) ஏத்துவா(ர்)
இடர்கள் தீர்ப்பார்
சிறைகொ(ள்)நீர்த் தில்லைதன்னுள்
திகழ்ந்தசிற் றம்பலத்தே
அறைகழ(ல்) ஆர்க்கநின்று அன(ல்)எரி ஆடுமாறே 8

விருத்தனாய்ப் பாலனாகி[1] விரிநிலா எறிக்கும்சென்னி
நிருத்தனூர் நிருத்தம் செய்ய நீண்டபுன் சடைகள் தாழக்
கருத்தனூர்[2] தில்லைதன்னுள் கருதுசிற் றம்பலத்தே
அருத்த[3]மா மேனிதன்னோ(டு) அன(ல்)எரி ஆடுமாறே 9

பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா எறிக்கும்சென்னிக்
காலனைக் காலால்காய்ந்த கடவுளார் விடைஒன்(று) ஏறி
ஞாலமா(ம்) தில்லைதன்னு(ள்) நவின்றசிற் றம்பலத்தே
நீல(ம்)சேர் கண்டனார்தா(ன்) நீண்(டு)எரி ஆடுமாறே 10

மதியிலா[4] அரக்க(ன்) ஓடி மாமலை எடுக்கநோக்கி
நெதியன்[5]தோ(ள்) நெரியஊன்றி நீ(டு) இரும்
பொழில்கள்சூழ்ந்த
மதியம்தோய் தில்லைதன்னுள் மல்குசிற் றம்பலத்தே
அதிசயம் போலநின்று அன(ல்)எரி ஆடுமாறே. 11

திருச்சிற்றம்பலம்

9.1 விருத்தனாய்ப் பாலனாகி - சிவபெருமான் விருத்த, குமார, பாலனான திருவிளையாடல் குறிக்கப்பெறுகிறது.
9. 2 கருத்தனார்: வினை முதல்வர்; கருத்திலிருப்பவர்.
9.3 அருத்தம்: பாதி 11.4 மதியிலா அரக்கன்-இராவணன்
11.5 நெதியன் - செல்வன்.

உ
சிவமயம்

நான்காம் திருமுறை — திருநாவுக்கரசர்.

பதிக எண்: 23. பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரயோகீ[1]
எத்தினால்[2] பத்திசெய்கே(ன்) என்னைநீ இகழவேண்டா
முத்தனே முதல்வாதில்லை அம்பலத்(து) ஆடுகின்ற
அத்தாஉன் ஆடல்காண்பா(ன்) அடியனேன்
வந்தவாறே 1

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்(பு)[3] அன
தோளிபங்கா
ஒருத்தரா(ல்) அறியஒண்ணாத் திருஉரு உடையசோதீ
திருத்தமாம் தில்லைதன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தநான் காணவேண்டி நேர்பட வந்தவாறே 2

கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினேன் நின்தன்பாதம் நடுப்பட நெஞ்சி(ன்)உள்ளே
மாட்டி(ன்)[4] நீர் வாளைபாயு(ம்) மல்குசிற் றம்பலத்தே
கூட்டமாம் குவிமுலையாள் கூடநீ ஆடுமாறே 3

1-1. பரமயோகம்-சிவஆனந்தப்பேறு; யோகம் மூவகை என்பதைச் சிவஞானபோதம் 3, *10*, *11* சூத்திரங்கள் தெளிவுறுத்தும். அவை : **ஆன்மயோகம்**—தன்னுயிர் தான் அறப்பெறல்; **ஞானயோகம்**—சிவனது அருளையே கண்ணாகப் பெற்று அருளாதல்; **சிவயோகம்** — அச்சிவ ஞானத்தால் சிவனைப் பெறுதல்,
2 எத்து : எஃது(சுட்டு) 2—3. காம்பு—மூங்கில்
3—4. மாட்டின் —பொன்னைப்போன்ற

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை அடிமைசெய்ய
எந்தைநீ அருளிச்செய்யா(ய்) யாதுநான்
செய்வ(து)என்னே
செந்தீயார்[1] வேள்விஓவாத் தில்லைச்சிற் றம்பலத்தே
அந்தியும் பகலு(ம்)ஆட[2] அடியிணை
அலசும்கொல்லோ 4

கண்டவா திரிந்துநாளும் கருத்தினு(ல்) நின்தன்பாதம்
கொண்டிருந்(து) ஆடிப்பாடிக் கூடுவன் குறிப்பினுலே
வண்டுபண் பாடுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
எண்திசை யோரு(ம்)ஏத்த இறைவநீ ஆடுமாறே 5

பார்த்திருந்(து) அடியனே(ன்)நான் பரவுவன்
பாடியாடி
மூர்த்தியே(ன்) என்ப(ன்)உன்னை மூவரின்
முதல்வ(ன்)என்பன்
ஏத்துவா(ர்) இடர்கள்தீர்ப்பாய் தில்லைச்சிற்
றம்பலத்துக்
கூத்தா! உன் கூத்துக்காண்பான் கூடநான்
வந்தவாறே 6

பொய்யினைத் தவிரவிட்டுப் புற(ம்)அலா அடிமை[1] செய்ய
ஐயநீ அருளிச்செய்யா(ய்) ஆதியே ஆதிமூர்த்தீ
வையகம் தன்னில்மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையநுன் ஆடல்காண்பான் பரம!நான்
வந்தவாறே 7

4-1. செந்தீயார்-செய்ய வேள்வித்தீ வளர்க்கும்அந்தணர்.
4-2 தில்லைச் சிற்றம்பலத்தே காலையந்தியும், உச்சிப்பகலிலும், மாலைச்சந்தியிலும் இடைவிடாதுஆடிக்கொண்டே இருத்தலால், அழகிய திருவடிகள் சோர்வுறுமோ? அலசல் — சோர்தல் 7—1. புறமலா அடிமை— அனைத்தும் அவனது இச்சை,அவனது அறிவு, அவனது செயல் எனக் கொள்ளுதலாகிய இறை பணி நிற்றல்

மனத்தினுர்[1] திகைத்துநாளும் மாண்பலா
நெறிகள்மேலே
கனைப்பரால்[2] என்செய்கேனே கறையணி
கண்டத்தானே
தினைத்தனை[3] வேதம்குன்றுத் தில்லைச்சிற் றம்பலத்தே
அனைத்துநின் இலயம்[4]காண்பான் அடியனேன்
வந்தவாறே 8

நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனே நீ
மஞ்(சு)அடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
அம்சொலாள் காணநின்று அழகநீ ஆடுமாறே 9

மண்உண்ட மாலவனும் மலர்மிசை மன்னினுனும்
விண்உண்ட திருஉருவம் விரும்பினுர் காணமாட்டார்
திண்உண்ட திருவேமிக்க தில்லைச்சிற் றம்பலத்தே
பண்உண்ட பாடலோடும் பரமநீ ஆடுமாறே. 10

திருச்சிற்றம்பலம்

நான்காம் திருமுறை : திருநாவுக்கரசர்

பதிக எண்: 80 பண்: கொல்லி

திருச்சிற்றம்பலம்

திருவடி தொடங்கித் திருமுடிவரை பாடி, மீண்டும் திருவடி போற்றுதலே சிவதரிசன விதி. 1. ஆடற்காட்சி 2. திருவடிக்காட்சி 3. துகில்காட்சி 4. கச்சுக்காட்சி 5. கவித்த கைக் காட்சி 6. ஏனத்து எயிற்று (பன்றிக் கொம்பு)க் காட்சி. 7. சிரித்த திருமுகக் காட்சி 8. நெற்றிக்கண் காட்சி 9. தூமத்த மலர்க்காட்சி 10. திருவடிப்

8—1 மனத்தினுர்—மனம். 8—2 கனைப்பர்-நெருங்குவர்
8—3 தனை—அளவு. 8—4. இலயம்-ஒடுக்கம்.

பெருவிரல்காட்சி ஆகிய பத்துமாகத் திருவடி தொடங்கித் திருவடியில் முடிவதாகிய சிவதரிசன கிரமமாகிய மரபு வழி அமைந்துள்ளது, இத்திருப்பதிகம்.

பாளை உடைக்கமு(கு)[1] ஓங்கிப்பன் மாடம் நெருங்கிஎங்கும்
வாளை உடைப்புனல்[2] வந்(து)எறி வாழ்வயல்
தில்லைதன்னுள்
ஆள உடைக்கழல்[3] சிற்றம் பலத்தா(ன்) **ஆடல்கண்டால்**
பீளை உடைக்கண்க ளால்பின்னைப் பேய்த்தொண்டர்
காண்பதென்னே 1

கருத்து: தில்லை நடராசனது திருக்கூத்தினைக் கண்ட கண்களால் மெய்த்தொண்டர் வேறொன்றையும் காணார். திருக்கூத்து அல்லாதவற்றைக் காண்போர், பீளைக்கண்ணு டைய பேய்த்தொண்டராவர் (எ-ம்)

குறிப்பு: நாயும் பேயும் குறிக்கோளின்றி அலைந்து திரிவன. புறநோக்காகிய புன்மையினால், தம் மனமும் அவ்வாறு அலைவது கண்டு வருந்தி, உய்யும் வழி உணர்த்துமாறு இறைவனிடம் இறைஞ்சுவது, மெய் யடியார் இயல்பு.

பொருவிடை ஒன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலிஅதளன்[4]
உருஉடை அம்மலை மங்கை[5] மணாள(ன்)
உலகுக்கெல்லாம்
திருஉடை அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்
றம்பலவன்
திருஅடி யைக்கண்ட கண்கொண்டு மற்றுஇனிக்
காண்பதுஎன்னே 2

---

1. 1 பாளையை உடைய பாக்குமரம். 2 வாளைமீன் துள்ளித்திரியும் புனல். 3 அன்பர்களை ஆட்கொள்ளுதற் கான கழலுடைய திருவடி. 2. 4 அதளன் - தோல் ஆடையன். 5 உருவுடைய மலைமங்கை - அழகுடைய பார்வதி.

கருத்து: திருவடியைக் கண்ட கண்கொண்டு, பிறவற்றை காண்பது சிவத் தொண்டு செய்யும் மெய்யடியாருக்குத் தேவையில்லாதது. (எ.ம்)

தொடுத்த மலரொடு தூபமும்
சாந்தும்கொண்(டு) எப்பொழுதும்
அடுத்து வணங்கு(ம்) அயனொடு
மாலுக்கும் காண்பரியான்
பொடிக் கொண்(டு) அணிந்துபொன்
ஞகியதில்லைச்சிற் றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு
மற்(று)இனிக் காண்பதுஎன்னே 3

வைச்ச பொருள்நமக்(கு) ஆகு(ம்)[1]என்(று)
எண்ணி நமச்சிவாய
அச்ச(ம்) ஒழிந்தே(ன்) அணிதில்லை அம்பலத்(து)
ஆடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி உந்தியின் மேல்அசைத்த
கச்சின் அழகுகண் டால்பின்னைக் கண்கொண்டு
காண்ப(து) என்னே 4

செய்ஞ்ஞின்ற[1] நீல[2]மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்(று) எரியும் விளக்(கு)ஒத்த நீல
மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற[3] **ஆடல்**கண் டால்பின்னைக் கண்கொண்டு
காண்ப(து) என்னே 5

4.1 நமச்சிவாய என்ற திரு ஐந்தெழுத்தே பிற்பயக்க வல்லவைப்புச் செல்வம். அது நிறைய, அச்சம் ஒழியும்.
5. 1 செய் - வயல். ஞின்ற - நின்ற என்பதன் போலி.
2 நீல மலர் - நீலோற்பலம், கருங்குவளை, கருநெய்தல்.
3 கை நின்ற ஆடல் - 'என்று வந்தாய்?' என்னும் திருக் குறிப்பு உணர்த்தும் திருக்கை; நின்ற திருக்கூத்து.

ஊனத்தை நீக்கி[1] உலகறி யஎன்னை ஆட் கொண்டவன்
தே(ன்)ஒத்(து) எனக்(கு)இனி யான்தில்லைச் சிற்றம்
பலவன் (எ)ங்கோன்
வானத் தவ(ர்)உய்ய வன்நஞ்சை உண்டகண்
டத்(து)இலங்கும்
ஏனத்(து) எயிறுகண் டால்பின்னைக் கண்கொண்டு
காண்ப(து)என்னே 6

தெரித்த கணையால் திரிபுர(ம்) மூன்றும்செந் தீயில்மூழ்க
எரித்த இறைவன் இமையவர் கோமா(ன்) இணைஅடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்(று)இனிக்
காண்ப(து)என்னே 7

சுற்று ம்) அமரர் சுரபதி[1] 'நின்திருப் பாத(ம்)அல்லால்
பற்(று)ஒன்(று) இலோ(ம்)'என்(று) அழைப்பப்
பரவை[2]யுள் நஞ்சைஉண்டான்
செற்(று)அங்க அநங்கனைத்[3] தீவிழித் தான்தில்லை
அம்பலவன்
நெற்றியில் கண்கண்ட கண்கொண்டு மற்(று)இனிக்
காண்ப(து)என்னே. 8

சித்தத்(து) எழுந்த செழுங்கம[4] லத்(து)அன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு(ம்) மாணிக்கம் தன்னுள்
விளங்கியதூ
மத்த[5] மலர்கண்ட கண்கொண்டு மற்(று)இனிக்
காண்ப(து) என்னே. 9

6.1 ஊனத்தை நீக்கியது-சமண் புகுந்த பழியை நீக்கியது.
8 1 சுரபதி - தேவர்க்குத் தலைவனாகிய இந்திரன்.
2. பரவை - பாற்கடல். 3 அங்க அநங்கன் - உருவம் உள்ள, உருவம் இல்லாத மன்மதன். (கந்தபுராணத்தில், மன்மதனை எரித்த வரலாறு) 9. 4 செழுங்கமலம், இதயக் கமலம், உந்திக்கமலம், புருவ நடுக்கமலம் மூன்றிலும் தோன்றி எழும் சுடர் 5 மத்தம் - மத்தகம் என்பதன் மரூஉ சென்னி.

தருக்கு[1] மிகுத்துத்தன் தோள்வலி உன்னித் தடவரையை[2]
வரைக்கைக ளா(ல்)எடுத்(து) ஆர்ப்ப மலைமகள்
கோன்[3] சிரித்து
அரக்கன்[4] மணிமுடி பத்து(ம்) அணிதில்லை அம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட கண்கொண்டு
காண்ப(து) என்னே 10

திருச்சிற்றம்பலம்

நான்காம் திருமுறை - திருநாவுக்கரசர்

பதிக எண்: 81 பண்: கொல்லி

திருச்சிற்றம்பலம்

கரு[1]நட்ட[2] கண்டனை அண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி(ல்) எய்யவல் லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட(ம்) ஆடியைத் தில்லைக்(கு)
இறையைச் சிற்றம்பலத்துப்
பெருநட்ட(ம்) ஆடியை வானவர் கோன்என்று[3]
வாழ்த்துவனே 1

ஒன்றி[4]இருந்து நினைமின்க(ள்) உந்தமக்(கு)
ஊன(ம்)[5]இல்லைக்
கன்றிய காலனைக்[6]காலால் கடிந்தா(ன்) அடியவற்(கு)ஆச்[7]
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தா(ய்?)என்னும் எம்பெரு மான்தன்
திருக்குறிப்பே 2

10.1 தருக்கு-உடல்திமிர். 2 தடவரை-பெரிய கைலைமலை;
3.கோன்-கோமான்,கோ,தலைவன் 4 அரக்கன்-இராவணன்;
1—1. கரு-நிறத்தையும் கொள்ளலாம், தேவாசுர வாழ்
வின் கரு எனவும் கொள்ளலாம். 2 நட்ட-நிலைக்கச் செய்த
3 வானவர்கோன்: தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும்
பெருமான். 2—4. ஒன்றி—மனம் சிதறாது ஒரு நிலைநின்று;
5 ஊனம்—குறை 6 கன்றிய காலனை—சினந்தஇயமனை;
7 அடியவர்க்குஆய்—மார்க்கண்டேயருக்காக

கல்மன வீர்[1]கழி யும்கருத் தேசொல்லிக் காண்ப(து) என்னே
நல்மன வர்நவில் தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்(று)அது போலப் பொலிந்(து) இலங்கி
என்மன மேஒன்றிப் புக்கனன்; போந்த[2]சுவடு இல்லையே! 3

கருத்து: தில்லைச் சிற்றம்பலத்துத் திருநடமிடும் நடராசப்பெருமான் என் உள்ளத்தில் ஒன்றிப் புகுந்துளான்; புகுந்த சுவடு இல்லை. (இது அடியேனது நற்பேறு). உருகாத நெஞ்சை யுடைய கல்போலும் திண்ணிய மனத்தவரோ, தம் நிலையில்லா விருப்பங்களை அவன்பால் அறிவித்து வரம் வேண்டுதலும், பெறுதலு மாய் உள்ளனர். நிலையற்றவற்றைப் பெறுத லால் என்ன பயன்? அவனையே பெறுதலன்றோ, பெறற்கரிய பேறு?

குனித்த[3]**புருவமும்** கொவ்வைச்செவ் வாயில் **குமிழ்சிரிப்பும்**
பனித்த **சடையும்** பவளம்போல் மேனியில் **பால்வெண்ணீறும்**
இனித்த முடைய எடுத்தபொற் **பாதமும்**[4] காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே 4

3.1 கல்மனவீர்—உருகாத நெஞ்சினை உடைய கல் போலும் திண்ணிய மனத்தீர். 2. போந்த—புகுந்த என்பதன் மரூஉ. 4—3 குனித்த—வளைந்த
4—4 பாதம்—(இங்கு) தூக்கிய திருவடி.

வாய்த்தது ந(ம்)தமக்(கு) ஈ(து)ஓர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பத(ம்)அருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்(து)அன்று முப்புரம் தீவளைத் தான்தில்லை அம்பலத்துக்
கூத்தனுக்(கு) ஆட்பட்(டு) இருப்ப(து)அன் றோநம்தம் கூழைமையே 5

கருத்து: மனிதப் பிறவி, அரியதொன்றாகும். அதை வீணாக்கி விடாது, மதித்து, அம்பலத்தரசனது அடிமையாய்த் தொண்டாற்றுவதே உரிய செயலும் சீரிய கடமையுமாகும்.

பூத்தன பொற்சடை பொன்போல் மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி அரித்தன பல்குறள் பூதகணம்
தேத்தென என்(று)இசை வண்டுகள் பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனில் கூத்துவல் லா(ர்)உள ரோஎன் தன் கோல்வளைக்கே 6

முடிகொண்ட மத்தமு(ம்) முக்கண்ணி(ன்)[1] நோக்கு(ம்) முறுவலிப்பும்
துடி[2]கொண்ட கையும் துதைந்த வெண்ணீறும் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலு(ம்)என் பாவிநெஞ்சில்
குடிகொண்ட வாதில்லை அம்பலக் கூத்தன் குரைகழலே 7

படைக்கல மாகஉன் நாமத்(து) எழுத்(து)அஞ்(சு)எ(ன்) நாவில்கொண்டேன்
இடைக்கல(ம்) அல்லே(ன்) எழுபிறப் பும்உனக்(கு) ஆட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீ(று)அணிந்(து)உன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தானே. 8

7-1 முக்கண்:- சிவபெருமானது வலது கண்—சூரியன்; இடதுகண்—சந்திரன்; நெற்றிக்கண் - அக்கினி.
7-2 துடி-உடுக்கை.

பொன்ஒத்த மேனிமேல் வெண்ணீ(று) அணிந்து
புரிசடைகள்
மின்ஒத்(து) இலங்கப் பலிதேர்ந்(து) உழலும்
விடங்கர்[1] வேடச்
சின்னத்தி னன்மலி தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
என்அத்த(ன்) ஆடல்கண்(டு) இன்புற்ற தா(ல்)இவ்
இருநிலமே 9

சாட[1] எடுத்தது தக்கன்தன் வேள்வி[2] யில் சந்திரனை,
வீட எடுத்தது காலனை, நாரண(ன்) நான்முகனும்
தேட எடுத்தது, தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாத(ம்)[3]அன் றேநம்மை
ஆட்கொண்டதே 10

கருத்து: தக்கனது வேள்வியில் சந்திரனைச் சாடித் தேய்க்க எடுத்ததும், திருக்கடவூரில் இயமனைஅழிக்க எடுத்ததும், திருமாலும் பிரமனும் தேட எடுத்ததும், தில்லைச்சிற்றம்பத்துள் நட்டம் ஆட எடுத்ததும் ஆகிய திருப்பாதம் அன்றே, நம்மை ஆட்கொண்டது?

திருச்சிற்றம்பலம்

ஐந்தாந் திருமுறை - திருநாவுக்கரசர்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

அன்னம்[1] பாலிக்கும்[2] தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம்[3] பாலிக்கு(ம்) மேலு(ம்)இப் பூமிசை
என்அன்(பு) ஆலிக்கு(ம்)[4] ஆறுகண்(டு) இன்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே 1

9-1 விடங்கர் - சுயம்பு; தானே முளைத்தவர்; உளியால் செய்யப்படாத இயல்பாய வடிவினர். 10-1 சாடல் - கொல்லல்; 10-2 வேள்வி - யாகம் 10-3 எடுத்திட்டபாதம் - தூக்கிய திருவடி; குஞ்சிதபாதம். 1.1 அன்னம் - சோறு 2 பாலித்தல் - கொடுத்தருளல். 3 பொன்னம் - உயர்ந்த வாழ்வு. 4 ஆலித்தல் - விரித்தல், பெருக்கல், நிறைதல்,

கருத்து: நில உலகில் நமக்குச் சோற்றை நல்கியவன், தில்லைக்கூத்தன். மேலும் அவனே மறுமையில் முத்திப் பேற்றினையும் அருள வல்லவன்.

இவ்வுலக வாழ்வில் எம்மாட்டு அன்புநெறி வளர்ந்து பெருகி வருகிறது. அன்பே சிவமாதலால், மானுட அன்பு வாழ்வை, மாண்பு நிறைந்த முத்திப் பேரின்பத்தை அடைதற்குச் சாதனமாகும். எனவே அன்பு சூழ் மனிதப் பிறப்பினை அவன் மேலும் நல்கியருளுவானே!

அரும்(பு)அற் றப்பட[1] ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்(பு)[2]அற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்(பு)அற்[3] றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூ(ர்)எம் பிரானையே 2

கருத்து: கரும்பு வில்லுடையோன் காமன், அக்கருவேளை எரித்த பெரும்பற்றப்புலியூர்ப் பிரானை, அரும்பு நீங்கிய ஆய்ந்த மலர்கொண்டு தொழுமின் (எ-று)

அரிச்சு[1](உ)ற் றவினை யா(ல்)அடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தா(ர்)என்(று) அயலவர்
சிரிச்சு(உ)ற் றுப்பல பேசப்ப டாமுனம்
திருச்சிற் றம்பலம் சென்(று)அடைந்(து) உய்ம்மினே 3

கருத்து: அரித்தலே செய்யும் நல்வினை தீவினைகளால் இடர்ப்பட்டு, இடுகாட்டில் எரிசூழக் கிடந்தார் எனப் பிறர் எள்ளிநகையாடு முன், நீவிர் திருச்சிற்றம்பலம் சென்று நற்கதி அடையுங்கள் (எ-று)

---

2. 1 அற்றப்பட - நீக்கப்பட. 2 சுரும்பு - வண்டினம் 1-3 அற்றம் - அழிவு, சோர்வு, துன்பம், மெலிவு, சிலை-வில் மன்மதனது கரும்புவில் காமத்தைத்தூண்டி துன்பம் முதலியவற்றை ஆக்கலால், 'கரும்பு அற்றச் சிலை' என்பதாயிற்று. 3-1 அரிச்சு, எரிச்சு, சிரிச்சுமுறையே அரித்து எரித்து சிரித்து-வின் மருஉ

அல்ல(ல்)[1] என்செயும் அருவினை[2] என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தா(ன்)[3] என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலனுர்க்(கு)
எல்லை இல்லதோ(ர்) அடிமைபூண் டேனுக்கே. 4

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி இருப்ப(ன்)என் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனுர்
வான்நி லாவி இருக்கவும் வைப்பரே 5

கருத்து: உடம்பில் உயிர் தரித்திருக்குங் காலமெல்லாம், நான், என்னை ஆளாக உடைய திருச்சிற்றம்பலவனுரை விளங்கப் பெற்றிருப்பேன். சிவானந்தத்தேனுகிய அவர் என்னைச் சிவலோகத்தில் நிலை பெறச்செய்வார் (எ-று)

சிட்டர்[4] வானவர் சென்று வரம்கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்து(உ)றை
சிட்டன்[5] சேவடி கைதொழச் செல்லு(ம்)அச்
சிட்டர் பா(ல்)நணு கான்செறு காலனே 6

கருத்து: அந்தணர் வாழும் தில்லைச்சிற்றம் பலத்தில் ஞானநடனமிடும் நடராசப் பெருமானை வணங்கி நலம் பெறும் சான்றேரைக்காலன் (இயமன்) அணுகமாட்டான். அவரவர் தகுதிக்கேற்ப இந்திரன், பிரமன், திருமால் முதலாயதேவர்களே சிறப்புற அழைத்துச் செல்லுவர்) (எ-று)

ஒருத்த னுர்உல கங்கட்(கு) ஒருசுடர்
திருத்த னுர்தில்லைச் சிற்றம் பலவனுர்
விருத்த னுர்இளை யார்விட முணடஎம்
அருத்த[6] னு(ர்)அடி யாரை அறிவரே 7

---

4. 1 அல்லல்-ஆகாமியவினை. 2 அருவினை- பிராரத்தம் 3 தொந்தம் - துவந்துவம், இருவினைத் தொகுப்பாகிய சஞ்சிதம். 6. 4 சிட்டர் - அறிவர், ஞானியர், தில்லைவாழ் அந்தணர் 6-5. சிட்டன்-ஞானமூர்த்தியாகிய நடராசப் பெருமான். 7. 6 அருத்தனுர்-எமக்கு மெய்ப் பொருளா யுள்ளவர்.

கருத்து : சிவபெருமானே முழுமுதற்கடவுள். அவனே உலகங்களுக்கெல்லாம் ஒரே விளக்காகிய சிவசூரியன். மெய்ப்பொருளான அவனே அடியாரை அறிவன் (எ-று)

விண்நி[1] றைந்ததொர் வெவ்அழ(ல்) இன்உரு
எண்'நி றைந்த இருவர்க்(கு) அறிவொணுக்
கண்[2]நி றைந்த கடிபொழி(ல்) அம்பலத்(து)
உள்நி றைந்துநின்(று) ஆடு(ம்) ஒருவனே. 8

வில்லைவட் டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லை[3]வட் டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லைவட் ட(ம்)திசை கைதொழு வார்வினை
ஒல்லை[4]வட் டம்கடந்(து) ஓடுத(ல்) உண்மையே 9

நாடி நாரணன் நான்முகன் என்(று)இவர்
தேடி யும்திரிந் தும்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்(து)
ஆடி பாத(ம்)என் நெஞ்சு(ள்) இருக்கவே. 10

கருத்து: தில்லைக்கூத்தன் என் அன்பு நெஞ்சில் நிறைந் திருக்கிறுன். ஆணவச் சண்டையிடும் திருமால் அயனுக்கோ அவன் காணவொண்ணு அரிய ஞவான். அன்புக்கு எளிய அவ்ன், ஆணவத்துக்கு அரியன் என்பது கருத்து.

மதுர வாய்மொழி மங்கையொர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர ஆர்த்(து)எடுத் தான்முடி பத்(து)[5]இற
மிதிகொள் சேவடி சென்(று)அடைந்து
(உ)ய்ம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

---

8. 1. எண்-எண்ணம் 2. தண்-கள், தேன்
9.3 வல்லை.வல்-விரைவு.வட்டமதில்-வட்டவடிவாயமைந்த பொன், வெள்ளி, இரும்பினுலான, அசுரரது ஆகாயக் கோட்டைகள் 4. ஒல்லை-விரைவு 5. முடிபத்து-பத்துத் தலைகளையுடைய இராவணன் (கயிலையை எடுத்த வரலாறு)

உ

சிவமயம்

ஐந்தாம் திருமுறை - திருநாவுக்கரசர்.

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பனைக்கை[1] மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து(ம்) வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் து(உ)ய்வனே 1

தீர்த்த[2] னைச்சிவ னை[3]ச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய ஒருவனை
பார்த்த னுக்(கு)அருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் து(உ)ய்வனே 2

கட்டும் பாம்பும் கபாலங்[4]கை மான்மறி
இட்ட[5] மா(ய்)இடு காட்(டு)எரி ஆடுவான்
சிட்டர் வாழ்தில்லை அம்பலக் கூத்தனை
எட்ட[6] னைப்பொழு தும்மறந் து(உ)ய்வனே 3

மாணி[7] பால்கறந்(து) ஆட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தஎன்
ஆணி[8] யைச்செம்பொ(ன்) அம்பலத் துள்நின்ற
தாணு[9] வைத்தமி யேன்மறந் து(உ)ய்வனே 4

---

1. 1. பனைக்கை-பனை மரம் போன்ற கரிய பரிய கை
2. 2. தீர்த்தன்-தூயன் 3 சிவன்-பேரின்ப வடிவினன்
3. 4. கபாலம்-பிரமனது மண்டை ஓடு 5 இட்டம்-விருப்பம். எரி-பிரளயகாலத்தீ, 6 எட்டனை-எள்தனை, எள் அளவு 4. 7 மாணி-பிரமசாரி 8 ஆணி-மாற்றுயர்ந்த பொன். 9 தாணு-நிலைபெற்றவன்

பித்த னைப்பெருங் கா(டு)அரங் காஉடை
முத்த[1] னைமுளை வெண்மதி சூடியைச்
சித்த னைச்செம்பொ(ன்) அம்பலத் துள்நின்ற
அத்த[2] னையடி யேன்மறந் து(உ)ய்வனே 5

நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கும் அறிவொணுச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனி(ன்) அம்பலத்(து)
ஆதி யைஅடி யேன்மறந் து(உ)ய்வனே 6

மைகொள்[1] கண்ட(ன்)எண் தோளன்முக் கண்ணினன்
பைகொள்[2] பாம்(பு)அரை ஆர்த்த[3] பரமனுர்
செய்ய மாது[4](உ)றை சிற்றம் பலத்(து)எங்கள்
ஐய[5] னைஅடி யேன்மறந் து(உ)ய்வனே 7

முழுதும் வானுல கத்து(உ)ள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூயசெம் பொன்[1]னினுல்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை[2] யேன்மறந்(து) எங்ஙன(ம்) உய்வனே 8

கா(ர்)உ லாமலர்க்[1] கொன்றைஅம் தாரனை
வா(ர்)உ லாமுலை[2] மங்கைம ணாளனைத்
தே(ர்)உ லாவிய தில்லையுள் கூத்தனை
ஆர்கி லாஅமு தைமறந்(து) உய்வனே 9

---

5. 1 முத்தன் - பாசத்தினின்றும் விடுபட்டவன். 5 2 அத்தன் தலைவன் 7. 1. மைகொள் - நஞ்சுண்டு கறுத்த 2. பை - (பாம்பினது) படம் 3. அரை ஆர்த்த - இடையில் கட்டிய. 4. செய்ய மாது - இலக்குமி 5. ஐயன்-தலைவன், அழகியன், நுண்மையானவன். 8. 1. தூயசெம்பொன்-ஆடகம், கிளிச்சிறை, சாம்பு நதம், கனகம் என்ற நால்வகை உயர் பொன்னுள் தூயதான கனகம் 2 இழுதையேன்-குற்ற முடையேன். 9. 1 கார் உலா-கார்காலத்து மலர்கின்ற 9.2 வார் உலா முலை-கச்சு அணிந்த மார்பினை உடைய உமையவள்.

ஓங்கு மால்வரை ஏந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற ஊன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கு[1](இ) லாத்தொண்ட னேன்மறந்(து)
உய்வனோ 10

திருச்சிற்றம்பலம்

ஆறாந்திருமுறை-திருநாவுக்கரசர்

பெரிய திருத்தாண்டகம்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்[1]
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திக(ழ்)ஒளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா[2] நாளே 1

கற்றானைக் கங்கைவார் சடையான் தன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியும் கருதி னானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய் வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோ மன்றே
மற்(று)ஆரும் தன்ஒப்பா(ர்) இல்லா தானை
வானவர்க(ள்) எப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே 2

கருத்து: அறம், பொருள், இன்பமாகிய உலகச் சிற்றின்பங்கள் நிலையற்றவை, அளவறுக்கப்பட்டவை, துன்பம் கொணர்பவை, வினை ஈட்டுபவை. இறைபணி நிற்றலாகிய

---

10. 1 பாங்கு - நற்சார்பு, உரிமை, கிழமை
1 1 யார்க்கும்-எத்தன்மையோர்க்கும். 1-2. பிறவா-பிறவிப் பயனை அடையாத

பேரின்பமே நிலேயானது, எனவே, பெரும்பற்றப் புலியூரானே மனம், வாக்கு, காயங்களால் வணங்காத நாளெல்லாம், உலக இன்பம் இருந்தாலும், உயர்ந்த பேரின்பம் இன்மையால், பிறப்பின் பயன் நிறைவுறுமை யின், 'பிறவாநாளே' என உறுதியாகக் கூறப் பெறுகிறது.

கருமானின் உரிஅதளே உடையா வீக்கி[1]க்
கனேகழல்கள் கலந்(து)ஒலிப்ப அனல்கை ஏந்தி
வருமானத்[2] திரள்தோள்கள் மட்டித்(து)[3] ஆட
வளர்மதியம் சடைக்(கு)அணிந்து மானேர் நோக்கி
அருமான வாள்முகத்தா(ள்) அமர்ந்து காண
அமரர்கணம் முடிவணங்க ஆடு கின்ற
பெருமானேப் பெரும்பற்றப் புலியூ ரானேப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே 3

அருந்தவர்கள் தொழு(து)ஏத்தும் அப்பன் தன்னே
அமரர்கள்தம் பெருமானே அரனே மூவா
மருந்(து)[4]அமரர்க்(கு) அருள்புரிந்த மைந்தன் தன்னே
மறிகடலும்[5] குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்(து)ஒளிய தாரகை[6]யும் திசைகள் எட்டும்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவு(ம்) ஆய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானேப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே 4

அரும்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத்(து) அகத்துள் தோன்றி
வரும்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள்[7] அகத்(து)அடக்கி மடவா ரோடும்

3. 1 வீக்கி-கட்டி. 2 மானம்-பெருமை. 3 மட்டித்து-மடித்து 4. 4 மூவாமருந்து-அமுதம். 4 5 மறிகடல்-அலே வீசும் கடல் 4.6 தாரகை-விண்மீன். 5. 7 வான்புலன்-சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்ற பெரும்புலன்கள்

பொருந்(து)அணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித்[1] தனைநினைய வல்லோர்க்(கு) என்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே 5

கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்
கனவயிரக் குன்(று)அனைய காட்சி யானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை
அருமறையோ(டு) ஆ(று)அங்க(ம்) ஆயி னானைச்
சுரும்(பு)[1]அமரும் கடிபொழில்கள்[2] சூழ்தென் ஆரூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்[3]கில்லா விளக்கை மிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே 6

வரும்பயனை எழுநரம்பி(ன்) ஓசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயம்செ(ய்) அவுணர்புர(ம்) எரியக் கோத்த
அம்மானை அலைகடல்நஞ்(சு) அயின்றான் தன்னைச்
சுரும்(பு)அமரும் குழல்மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத[1] சிந்தையராய்த் துறந்தோ(ர்) உள்ளப்
பெரும்பயனைப்[2] பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே 7

கா(ர்)ஆனை ஈ(ர்)உரிவைப் போர்வை யானைக்
காமருபூங் கச்சிஏ கம்பன் தன்னை
ஆரேனும் அடியவர்கட்(கு) அணியான் தன்னை
அமரர்களுக்(கு) அறிவரிய அளவி லானைப்

5.1 பொது நீக்கி-சிவத்துக்கு மேலானதாகவோ, சமமானதாகவோ வேறோர் தெய்வம் கொள்ளாது சிவபரத்துவமாகிய தனிப்பெருந்தன்மையை உணர்தல். 6. 1. சுரும்பு-வண்டு. 2. கடிபொழில்-நறுமணச் சோலை. 3. துளக்கு-அசைவு 7. 1. துளங்காத-கலங்காத 2. பெரும் பயனை-பற்றற்ற உள்ளத்தார் பெறுகின்ற நிறைவான நிலையான பயனை

பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்[1]
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்
பேரானைப்[2] பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே 8

முற்றாத பால்மதியம் சூடி னானை
மூவுலகும் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரமூன்றும் செற்றான் தன்னைத்
திக(ழ்)ஒளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத்(து) அமர்ந்(து)உறையும் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும் பற்றப் புலியூ ரானைப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே 9

கா(ர்)ஒளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிக்கமலத்(து) இருந்தவனு(ம்) காணா வண்ணம்
சீ(ர்)ஒளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திக(ழ்)ஒளியைச் சிந்தைதனை மயக்கம் தீர்க்கும்
ஏ(ர்)ஒளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழு உ)லகும் கடந்(து)அண்டத்(து) அப்பால் நின்ற
பே(ர்)ஒளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நா(ள்)எல்லாம் பிறவா நாளே. 10

திருச்சிற்றம்பலம்

---

8 1. நட்டம்-நடம் என்பதன் விரிவு. 2. பேர்-பெயர் என்பதன் மரூஉ

உ
சிவமயம்

ஆறாந்திருமுறை-திருநாவுக்கரசர்
புக்க திருத்தாண்டகம்

மங்குல் மதிதவழும் மாட வீதி[1]
மயிலாப்பி(ல்)[2] உள்ளார் மருக(ல்)[3] உள்ளார்
கொங்கில் கொடுமுடியார்[4] குற்றா லத்தார்[5]
குடமூக்கி(ல்)[6] உள்ளார்போய்க் கொள்ளம்பூதூர்த்
தங்கு(ம்) இட(ம்)அறியார் சால நாளார்
தரும புரத்(து)உள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீ(று)அணிந்து பூதம் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 1

நாக(ம்) அரைக்கசைத்த நம்ப(ர்) இந்நாள்
நணிபள்ளி உள்ளார் போய் நல்லூர்த்தங்கிப்
பாகப் பொழுதெலாம் பாசூர்த் தங்கிப்
பரிதி நியமத்தார் பன்னி ருநாள்
வேதமும் வேள்விப் புகையும் ஓவா
விரிநீர் மிழலை எழுநாள் தங்கிப்
போகமும் பொய்யாப் பொருளு(ம்) ஆனார்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 2

துறம்[1]காட்டி எல்லாம் விரித்தார் போலும்
தூமதியும் பாம்பு(ம்) உடையார் போலும்
மறம்காட்டி மும்மதிலும் எய்தார் போலும்
மந்திரமு(ம்) தந்திரமும் தாமே போலும்

---

1. மாடவீதி-உயர்ந்த மேல்மாடங்களை இருமருங்கும் உடைய பெருந்தெரு 2. மயிலாப்பூர்-சென்னை-(தொண்டை நன்னாடு)உமை, மயில் உருவில் இறைவனை வழிபட்ட தலம், ஆப்பு = (இறைவன் உமையது அன்பால்) பிணிப்புண்ட இடம் 3. மருகல்-திருமருகல் (சோணாட்டுத்தலம்) 4. கொடுமுடி-கொங்குநாட்டுத் தலம். 5. குற்றாலம்-பாண்டிய நாட்டுத்தலம் 6. குடமூக்கு-கும்பகோணம். 3-1. துறம்-துறவு, இங்கு ஞானம் என்க.

அறங்காட்டி அந்தணர்க்(கு)அன்(று) ஆல நீழல்
அற(ம்)அருளிச் செய்த அரனு(ர்) இந்நாள்
புறங்காட்(டு) எரியாடிப் பூதம் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 3

வா(ர்)[1]ஏறு வன[2]முலையாள் பாக மாக
மழுவாள்கை ஏந்தி மயானத்(து) ஆடிச்
சீ(ர்)ஏறு தண்வயல்சூழ் ஓத[3] வேலித்[4]
திருவாஞ்சி யத்தார் திருநள் ளாற்றூர்
கார்(ஏ)று கண்டத்தார் காமற் காய்ந்த
கண்விளங்கு நெற்றியார் கடல்நஞ்(சு) உண்டார்
போ(ர்)ஏறு தா(ம்)ஏறிப் பூதம் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 4

கா(ர்)ஆர் கொன்றைக் கண்ணி சூடிக்
கபாலம்கை ஏந்திக் கணங்கள் பாட
ஊரா(ர்) இடு பிச்சை கொண்டு (உ)ழலும்
உத்தமராய் நின்ற ஒருவ னூர்தாம்
சீரார் கழல்வணங்கும் தேவ தேவர்
திருவாரூர்த் திருமூலட் டான மேயார்
போ(ர்)ஆர் விடைஏறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 5

கா(து)ஆர் குழையினர் கட்டங்[1] கத்தர்
கயிலாய மாமலையார் காரோணத்தார்
மூதாயர் மூதாதை[2] இல்லார் போலும்
முதலும் இறுதியும்[3] தாமே போலும்

---

2. வனம்-அழகு, 3. ஓதம் - அலை. 4. வேலி-கடல்.
6.1 கட்டங்கம்-மழு. 6.2 மூதாயர் மூதாதை-மூத்த தாயர், மூத்த தந்தை 6.3 முதல்இறுதி-(ஆதி அந்தம்) தோற்றஒடுக்கம்

மா(து)ஆய[4] மாதர் மகிழ அன்று
வன்மதவேள் தன்உடலங் காய்ந்தா(ர்) இந்நாள்
போ(து)ஆர் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 6

இறந்தார்க்கும் என்றும் இறவா தார்க்கும்
இமையவர்க்கும் ஏகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கும் என்றும் பிறவா தார்க்கும்
பெரியான்தன் பெருமையே பேச நின்று
மறந்தார் மனத்(து)என்றும் மருவார் போலும்
மறைக்காட்(டு) உறையும் மழுவாட் செல்வர்
புறந்தாழ் சடைதாழப் பூதம் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 7

குலாவெண் தலைமாலை என்பு பூண்டு
குளிர்கொன்றைத் தார்(ர்)அணிந்து கொல்ஏ(று)ஏறிக்
கலாவெம் களிற்று(உ)ரிவைப் போர்வை மூடிக்
கையோ(டு) அனல்ஏந்திக் காடு (உ)றைவார்
நிலாவெண் மதிஉரிஞ்ச நீண்ட மாடம்
நிறைவயல்சூழ் நெய்த்தானம் மேய செல்வர்
புலால்வெண் தலைஏந்திப் பூதம் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 8

சந்தித்த கோவணத்தர் வெண்ணூல் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோ(ம்) இந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய ஏறிப்
படுதலையி(ல்) என்கொலோ ஏந்திக் கொண்டு
வந்(து)இங்(கு)என் வெள்வளையும் தாமு(ம்) எல்லா(ம்)
அணியாரூர் நின்(று)அந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்தீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 9

---

6. 4 மாது - அழகு.

பாதங்கள் நல்லார் பரவி ஏத்தப்
 பத்திமையால் பணிசெய்யும் தொண்டர் தங்கள்
ஏதங்கள்[1] தீர இருந்தார் போலும்
 எழுபிறப்பும் ஆளுடைய ஈச ஞர்தாம்
வேதங்க(ள்) ஓதிஓர் வீணை ஏந்தி
 விடைஒன்று தா(ம்)ஏறி வேத கீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்[2]
 புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 10

பட்டுடுத்துத் தோல் போர்த்துப் பாம்(பு)ஒன்(று)
 (ஆர்த்துப்
 பகவனூர்[3] பாரிட[4]ங்கள் சூழ நட்டம்
சிட்ட[5]ராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
 தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ(ம்) இந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ(ல்) உண்டே
 ஓதுவதும் வேதமே வீணை உண்டே
கட்டங்கம் கையதே சென்று காணீர்
 கறைசேர் மிட(று)எம் கபாலி யார்க்கே 11

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் திருவாழ்வில் நிகழ்ந்த வியத்தகு அருட்செயல்கள்

திருக்கயிலையில் சிவபெருமானுக்கு அணுக்கத்தொண்டு செய்தவர், ஆலால சுந்தரர். ஒருநாள், சிவபூசைக்காக அவர் திருநந்தன வனத்தில் நறுமலர் கொய்தார். கமலினி அநிந்திதை இருவரும் அம்மையாரது அணுக்கத்தோழிகள். மலர் ஆய அவர்களும் ஆங்கு வந்தனர். தென்னாடு செய்தவப்பயனால், கயிலைப்பதியில் இவர்கள் கண்கள் திரு

1, ஏதங்கள்-துன்பங்கள்; 2. வீக்கி - கட்டி. 3 பகவன்-ஐசுவரியம், வீரம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் எனும் ஆறு குணங்களை உடையவன் 4. பாரிடம்-பூதகணம். 5. சிட்டர்-மேலானவர்.

நோக்கம் செய்தன. அதன் பயன், தமிழகத்தில் சுந்தரர் திருநாவலூரிலும்,பரவையார் திருவாரூரிலும்,சங்கிலியார் திருவொற்றியூரிலுமாகத் திரு அவதாரம் செய்தனர்.

2 புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளைச்சுந்தரர் திருமணம் கொள்ளும் வேளை; சிவபெருமான், திரு அருள் —துறை வேதியராய் மணப்பந்தலில் தோன்றினர். 'மண்ணின் மீது துன்புறு வாழ்க்கை, சுந்தரரைத் தொடரா வண்ணம், தாம் அவரைத் தொடர்ந்து வந்து, நன்புல மறையோர் முன்னர் சுந்தரரைத்தடுத்தாட் கொண்டார்!

3 ஆட்கொண்ட பெருமான் அருள்துறை ஆலயத்துள் மறைந்தார்; நம்பிஆரூரர், 'தம்பெருவிருப்பினோடு தனித் தொடர்ந்தழைப்ப, **மாதோடு**, உம்பரின் **விடை**மேல் தோன்றி, அவர்தமக்கு உணர்த்தல் உற்றார்.

4 சுந்தரர் முதலில் பெருமானிடம் வன்மை பேசிய தால், அவராலேயே **வன்தொண்டன்** என்னும் திருநாமம் சூட்டப் பெற்றார்.

5. ''நமக்கு அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க **அர்ச்சனை பாட்டே** ஆகும்; ஆதலால் மண்மேல்நம்மைச் சொற்றமிழ் பாடு' என்று சிவபெருமான் பணித்தார்.

6. 'முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே என்பெயர் **பித்தன்** என்றே பாடுவாய்' என்ற சிவ ஆணைப்படி **'பித்தா பிறைசூடி'** எனத்தொடங்கிச் சுந்தரர், இசைத் தமிழ்ப் பாமாலைகள் பல்லாயிரம் சூட்டி இறைவனைப் போற்றினர்.

7. திருவதிகைச் சித்தவடத்தில் சுந்தரரது திரு முடியில் சிவபெருமான் தம் **திருவடிசூட்டி** யருளினன்.

8. 'தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்' எனத் திருவாரூர்த் தியாகேசப் பெருமானுல் அருளப் பெற்றுத் **தம்பிரான் தோழராஞர்.**

9. சுந்தரரது ஒரு திருமணத்தைத் தடுத்த சிவ பெருமான், அவருக்குப் பரவையார், சங்கிலியார் இரு வரையும் மணம் புரிவித்தான்.

10. சுந்தரர், பரவையார் பொருட்டுக் குண்டை யூரில் பெற்ற நெல்மலையைத் திருவாரூருக்குக் கொண்டு வரச் சிவ பெருமானிடமே பணியாட்களை வேண்டிப் பெற்ருர்.

11. திருப் புகலூரில், சிவபெருமான், சுந்தரர்க்குச் செங்கல்லைப் பொன்னுக்கி அருளினுன்.

12 திருமுதுகுன்றத்து ஆற்றிலிட்ட பன்னீராயிரம் பொன்னைத் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் வரப் மீளப்பெற்ருர்.

13. திருபாச்சிலாச்சிரமத்தில் இறையருளால்பொன் மீளப்பெற்ருர்.

14. திருக்குருகாவூரில் பொதி சோறு பெற்ருர்.

15. சூளுரை மறுத்துத் திருவொற்றியூர் நீங்கியமை யான், கண்ணொளி இழந்த சுந்தரர், திருவெண்பாக்கத்தில் சிவபெருமானிடமிருந்து ஊன்றுகோலையும், காஞ்சிப்பதி யில் இடக்கண்ணையும், திருவாரூரில் வலக்கண்ணையும் திரும்பப் பெற்ருர்.

16. திருத்துருத்திப் பெருமானைப் பணிந்து போற்றித் திருக்குளத்தில் நீராடி, உடற்பிணி நீங்கப் பெற்ருர்.

17. திருப்பரங்குன்றத்தில் முடியுடை மூவேந்தரும் சூழ்ந்து நிற்க, இறைவனை வழிபட்டார்.

18. காவிரி வெள்ளம் இருமருங்கும் விலகிவழிவிட ஆற்றைக் கடந்து சென்று திருஐயாற்று இறைவனை வழிபட்டார்.

19. சேரமான், தன்னுடன் அனுப்பிய பரிசில்களை அவிநாசிக்கு அருகில் திருமுருகன் பூண்டியிலே, வேடர் உருவில் சிவகணங்கள் வழிப்பறி செய்ய, பரமனைப் பரவி, அவற்றைத் திரும்பப் பெற்றார்.

20. அவிநாசியில் பல ஆண்டுகளுக்கு முன் சிறுவன் ஒருவனை முதலை விழுங்கியது. அவனது பெற்றோரது துயர்கண்டு, சிவபெருமான் திரு அருளால், முதலை உண்ட மதலையை வளர்ந்த மகனாக உமிழச் செய்து வரவழைத்தார்.

21. இந்திராதி தேவர்களும் திருமாலும், பிரமனும் புடைசூழ, வெள்ளையானை மீதூர்ந்து திருக்கயிலைக்குச் சென்று எம்பெருமான் திருவடி கலந்தார்.

தோழமை நிலையில், சுந்தரர் சிவபெருமானைப் பல திருத்தலங்களிலும், பலபல உருவிலும், செயலிலும், பண்பிலும், சூழலிலும், கண்டும் கேட்டும், உண்டும் உயிர்த்தும் இன்புற்றவர்.

வேட்கை, ஊடல் தீர்த்தற்காகத் தம் மனைவியர்பால் சிவபெருமானையே தூதாக அனுப்பியவர். அவர், சிவ பெருமானிடம் பொன்னும் பொருளும் இன்னும் பலவும் பெற்றவர்.

இறைவனைப் பழித்தும் புகழ்ந்தும், பலப்பல பாடியும் தோழமையின் நெருக்கத்தில் திளைத்தவர் சுந்தரர்.

அவரது அருட்செயல்களை நாம் அளவிட்டுக் கூறுதல் என்பது, கடலைக் கையால் கடக்கும் முயற்சியேயாம்.

வளர்க வன்தொண்டர் புகழ்!

உ
சிவமயம்

ஏழாந் திருமுறை - சுந்தரர்

பதிக எண்: 90. பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மடித்(து)ஆடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ
வாழு நாளும்
தடுத்(து)ஆட்டித் தருமனார் தமர்செக்கி(ல்)
இடும்போது தடுத்(து)ஆட் கொள்வான்
கடுத்(து)ஆடும் கரதலத்தில் தமருகமும் எரிஅகலும்
கரிய பாம்பும்
பிடித்(து)ஆடிப் புலியூர்ச்சிற் றம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்றா(ம்) அன்றே 1

கருத்து: சிற்றம்பலத்தில் திருநடமிடுகிறான், நடராசப் பெரும்ான். அவனது குஞ்சிதபாதம் என்ற தூக்கிய திருவடிக்கீழ் அமைதியுறுதலே உயிருக்கு முத்திச்சிறப்பு.

அத்தகைய முத்திப் பேற்றிற்கு முன்னதாக, உயிர் உண்பதும் உறங்குவதுமான இவ் உலகச் சிற்றின்ப வாழ்வில் தலைப்படுகிறது. அந்நாட்களிலும் உயிரானது மனம் மொழி மெய்களால், பெரும்பற்றப் புலியூரானைப் போற்றி நிற்றலே தலையாய கடன்.

அவ்வாறு பற்றிநிற்கும் உயிருக்கு, அதன் வாழ்விலும் சாவிலும் திருவருள் பாலிக்கிறான், தில்லைகூத்தன்.வாழ்வின் கண், உலக அவலங்களிலிருந்து கரை ஏற்றிக் காத்தலும், இறப்பின்கண் இயமதூதுவர்கள் உயிரைச் செக்கிலிட்டுத் துன்புறுத்தாமல் தடுத்து ஆட்கொள்ளுதலும், கூத்தப் பெருமானது அளப்பரிய பெருங்கருணையே யாகும். (எ-ம்)

பேராது காமத்தில் சென்ருர்போ(ல்) அன்றியே
பிரியா து(உ)ள்கிச்
சீ(ர்)ஆர்ந்த அன்பராய்ச் சென்றுமுன் அடிவீழும்
திருவி ஞரை
ஓராது தருமனுர் தமர்செக்கி(ல்) இடும்போது
தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்(து)எம் பெருமானைப்
பெற்ரு(ம்) அன்றே 2

கருத்து: சிலர் தமது இறுதிக் காலம் வரை உலகச் சிற்றின்பங்களிலேயே உழன்று திரிவர். அவர்போலன்றி, நிறைந்த அன்புடன். பொன்னம் பலத்தான் பொற் பாதத்தில்வீழ்ந்து வணங்கிப் போற்றி நிற்கும் பிறரே பெரும் பேறு பெற்ரோர் ஆவர். அன்னவரை இயம தூதுவர்கள், தம் அறியாமையால் துன்புறுத்த முற்படுங் கால், புலியூர்ச் சிற்றம்பலத்தான் தடுத்து ஆட்கொள் வான். அப் பெரியோனையே பெற்றுவிட்ட பிறகு, பெற வேண்டுவது இனி யாதுளது? (எ-று)

நரியார்தம் கள்ளத்தால் பக்கான பரி(சு)ஒழிந்து
நாளும் உள்கித்
திரியாத அன்பராய்ச் சென்றுமுன் அடிவீழும்
சிந்தை யாரைத்
தரியாது தருமனுர் தமர்செக்கி(ல்) இடும்போது
தடுத்(து)ஆட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்ரு(ம்) அன்றே 3

கருத்து; நரி ஒரு வஞ்சனை உள்ளம் கொண்ட பிராணி அதைப்போன்று வஞ்சனை உள்ளத்தார், இழி மனப் பட்டவராய்த் தமது ஒவ்வொரு செயலுக்கும் பயனை விரும்பி நிற்பர் (தவம் செய்வோருள், வரம் கேட்போரும் அத்தன்மையரே). பயனை எதிர் நோக்காது பரமனடி யையே பற்றிநிற்போரை, அவன் எப்பொழுதும் காத்தருளுவான். (எ-று)

கருமைஆர் தருமனுர் தமர்நம்மைக் கட்டியகட்(டு)
அறுப்பிப் பானை,
அருமையாம் தன்உலகம் தருவானை, மண்ணுலகம்
காவல் பூண்ட
உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கம் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்ற(ம்) அன்றே 4

கருத்து: தில்லைச் சிற்றம்பலவன், தம் அன்பரைத் தடுத்தாட்கொள்ளும், பேரருளாளன். இருள் நிறத்து இயமனும் அவனது தூதுவரும் நம்மை இறப்பின்கண் இடர்ப் படுத்தும்போது, அவர்களது பாசக் கயிற்றி னின்றும் நம்மைக் காப்பவன். அத்தோடு அமையாது பெறுதற்கரிய சிவலோக பதவியையும் நமக்கு அருளுபவன். பல்லவ மன்னர், தம் செங்கோன்மையால் மண்ணுலக உரிமை கொண்டவர்; அவர்க்குத் திரை மறுக்கும் மாற் றரசர்க்குப் பெருமான் இன்னல் கொடுத்தது, செங் கோன்மைக்கும் இறை அன்பிற்குமான பரிசிலாகும். (எ-ம்)

கருமானின் உரிஆடை, செஞ்சடைமேல்
வெண்மதியக் கண்ணி யானை
உரு(ம்)அன்ன கூற்றத்தை உருண்(டு)ஓட
உதைத்(து),உகந்து உலவா இன்பம்
தருவானைத் தருமனுர் தமர்செக்கி(ல்)
இடும்போது தடுத்(து)ஆட் கொள்வான்
பெருமானுர் புலியூர்ச்சிற் றம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்ற மன்றே. 5

கருத்து : சிவபெருமான் மதயானையினது தோலை உரித் துப் போர்த்தவன். அந்திவான நிறத்துச் சடையினன். பிறைச் சந்திரனைச் சூடியவன். மார்க்கண்டேயருக்காக இடிபோன்று முழங்கும் இயமனைக் காலால் உதைத்து, அன்புடைச் சிறுவனுக்கு இன்பம் அருளியவன். (எ-ம்)

உய்த்(து)ஆடித் திரியாதே உள்ளமே
ஒழிகண்டாய் ஊன்க(ண்) ஓட்டம்
எத்தாலும் குறைவில்லை என்பர்காண்,
நெஞ்சமே, நம்மை நாளும்
பைத்(து)ஆடும்[1] அரவினன் படர்சடையன்
பரஞ்சோதி பாவம் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் லம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்று(ம்) அன்றே. 6

கருத்து: தில்லைப் பெருமானை நாம் அடைந்துள்ளமையால் நமக்கு எதனுலும் குறைவில்லாத பெருவாழ்வு உளதாயிற்று என நம்மைப் பலரும் புகழ்கின்றனர்; எனவே, மனமே! நீ இந்த நிலையற்ற உடம்பின்மேல் பற்றுக் கொண்டு அதை வளர்ப்பதற்கான செயல்களிலேயே வாழ்வை வீணுக்காதே, அவனது திருவடியையே சிந்தித்திரு. (எ-ம்)

முட்டாத[2] முச்சந்தி[3] மூவா
யிரவர்க்கும் மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினையும் போக
விட்டானை மலைஎடுத்த இராவணனைத்
தலைபத்தும் நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற்ற றம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்று(ம்) அன்றே, 7

கருத்து: தில்லை மூவாயிரவர்க்குத் தலைவனும், மெய்யடியாரது பாவ புண்ணியங்களைப் பொசுக்குபவனும் இராவணனது பத்துத் தலைகளையும் நெரித்தவனுமான சிவபெருமானைப் போற்றி வழிபடுக. (எ-ம்)

---

1 பைத்தாடும் அரவு - படம் எடுத்து ஆடும் பாம்பு
2 முட்டாத – தப்பாத 3 முச்சந்தி - காலை, நண்பகல், அந்தி ஆகிய மூன்று பொழுதும் (வழிபாடு செய்கிற)

கற்றானும்[1] குழையுமா(று) அன்றியே
கருதுமா கருது கிற்றூர்க்(கு)
எற்றாலும் குறைவில்லை என்பர்காண்
உள்ளமே நம்மை நாளும்
செற்(று)ஆட்டித் தருமனூர் தமர்செக்கி(ல்)
இடும்போது தடுத்(து)ஆட் கொள்வான்
பெற்[2]றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்று(ம்) அன்றே. 8

கருத்து: வலிய கல்லும் குழைந்து உருகும்படி, இறைவனிடத்து நெகிழ்ந்த நெஞ்சொடு அன்பு செய்வார்க்கு எவ்வித குறைவுமில்லை (எ-ம்)

நாடுடைய நாதன்பால் நன்(று)என்றும்
செய்மனமே நம்மை நாளும்
தாடு[3](உ)டைய தருமனூர் தமர்செக்கி(ல்)
இடும்போது தடுத்(து)ஆட் கொள்வான்
மோடு(உ)டைய[4] சமணர்க்கும் முடையுடைய[5]
சாக்கியர்க்கும் மூடம்[6] வைத்த
பீடு(உ)டைய புலியூர்ச்சிற் றம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்று(ம்) அன்றே 9

கருத்து: சிறந்த அடியார் சிந்தனையுள் தேனூறி நிற்கும் சிவபெருமான் புறத்தார்க்குச் சேயோனுவான்; எனவே, சமணசாக்கியர்க்கு அறிவின்மை (சிவஞானத்தெளிவின்மை)யை அளித்தவனும் சிவபெருமானேயாம், (எ-ம்)

பா(ர்)[7]ஊரும் அர(வு)அல்குல் உமைநங்கை
அவள்பங்கன், பைங்கண் ஏற்றன்,[8]

1 கற்றானும் - கல் தானும், 2 பெற்றம்: எருது (ஈறு குறைந்தது) 3 தாடு - தலைமை. 4 மோடுடைய சமணர் - ஊன்உண்ணும் சமணர். 5 முடையுடைய சாக்கியர் - நீராடும் வழக்கமில்லாததால் முடை நாற்ற முடைய சாக்கியர் 6 மூடம் - அறிவின்மை 7 பார் - நிலம் 8 ஏற்றன் - எருதினை ஊர்தியாக உடையவன்.

ஊ(ர்)ஊரன் தருமஞர் தமர்செக்கி(ல்)
இடும்போது தடுத்(து)ஆட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான், ஆரூரன் மீகொங்கில்[1]
அணிகாஞ் சிவாய்ப்[2]
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே
பெற்ற(ம்) அன்றே

திருச்சிற்றம்பலம்.

மாணிக்க வாசகர் வாழ்வில் நிகழ்ந்த வியத்தகு அருட் செயல்கள்

பாண்டிய நாட்டின் சிவத்தலங்களுள் ஒன்ருன திருவாதவூர், மதுரைக்கு ஏழுகல் தொலைவில் உள்ளது. இத் திருத்தலத்தில் அமாத்திய அந்தணர்குலத்தில், இறை அருளால் தோன்றிய ஒரு சிவகணத் தலைவரே, திருவாத ஊரர் என்னும் மாணிக்கவாசகர்.

1. முன்னைச் சிவப்பேற்ருல், தமது பதினறு ஆண்டிற்குள்ளாகவே கலைஞானங்கள் எல்லாம் கற்றுச் சிறந்தார்.

2. பாண்டிய மன்னன் அரிமர்த்தனனல், '**தென்னவன் பிரமராயன்**' என்ற பட்டமும், அமைச்சர் பதவியும் பல வரிசைகளும் பெற்ருர்.

3 பாண்டியனது நூருயிரம் பொன்னொடு, குதிரைகள் வாங்கச் சென்ருர். திருப்பெருந்துறையில் மானிட உருவில் குருவாய்த் தோன்றிய சிவபெருமானல் **திருஐந்தெழுத்தை உபதேசிக்கப்பெற்ருர்**. ஆட்கொள்ளப் பெற்ற அந்நிலையில் அவர் சூட்டிய தீந்தமிழ்ச் சொல்

---

1 மீகொங்கில் - மேற்குத் திசையில் கொங்குநாட்டின் கண் 2 காஞ்சிவாய் - காஞ்சி நதிக்கரையில்

மாலைகளைச் செவியுற்று மகிழ்ந்த சிவபெருமான் அவருக்கு **மாணிக்கவாசகர்** என்னும் திருநாமம் சூட்டினன்.

4. மாணிக்க வாசகரோடு உடனிருந்த அடியார்கள் திருப்பெருந்துறையில் சோதியுள் புகுந்து இறையடி சேர்ந்தனர்.

5. குதிரைக்கு எனக் கொண்டுவந்த பொருளனைத்தும் திருக்கோயில் கட்டுதல், திருவிழா எடுத்தல், திருமடங்கள், திருநந்தனவனங்கள் அமைத்தல், மாகேசுவர பூசை முதலிய சிவப் பணிக்கு ஆயின.

6. அரச ஆணையும், அமைச்சர் பொருப்பும் பிழைத்த அடிகளைப் பாண்டியன் பலவாறு துன்புறுத்தினன்.

7. திருவாதவூரருக்குத் துணைநிற்கத் திருவுளங் கொண்டான், இறைவன்; காட்டு நரிகளை எல்லாம் பரிகளாக்கி, சிவகணநாதர்களைக் குதிரை வீரர்களாகப் பணித்து, வேதமாகிய வெள்ளைக்குதிரையில் தானே பாகர் தலைவனய், பரிமேலழகனய்த் தோன்றி அருளினன்.

8. ஆவணி மூலநாளில் குதிரைகள் கயிறுமாற்றிக் கொடுக்கப் பெற்றன. அன்று நள்ளிரவில் குதிரைகள் எல்லாம், தம் பழைய உருவாகிய நரிகளாக மாறி, முன்பிருந்த குதிரைகளையும் கொன்றுதின்று, ஊரார் அஞ்ச, ஊளையிட்டு ஓடின.

9. மாணிக்க வாசகருக்கு மறுபடியும் மன்னனல் இடர்ப்பாடு, வைகையில் வெள்ளம் வர, வருணனைப் பணித்தான், சிவபெருமான்.

10. வாதவூரருக்கும், வஞ்சி எனும் பிட்டு விற்கும் மூதாட்டிக்கும் திருவருள் புரிவதற்காகச் சிவபெருமானே பிட்டுக் கூலிக்கு மண் சுமந்தான்;

11. வெள்ளக் கரையைத் தானும் அடைக்காத தோடு மற்றவர்களையும் வேலை செய்ய வொட்டாது விளை யாட்டினன் எனக்கருதி வெகுண்ட பாண்டியன், கூலி யாளைப் பிரம்பால் அடித்தான். அண்ட நாயகனை அடித்த அப்பிரம்படி அனைத்து உயிர்களினது முதுகிலும் விழுந்தது.

12. மாணிக்கவாசகர் தில்லையில் வாழ்ந்த நாளில், ஈழ நாட்டிலிருந்து வந்து தருக்கி நின்ற புத்த குருமாரை வாதில் வென்றார்; ஊமைப் பெண்ணைப் பேசச் செய்து, ஈழ மன்னனையும் புத்தரையும் சைவராக்கினர்.

13. திருவாசகத்தையும் திருக்கோவையாரையும், மாணிக்க வாசகர் பாடிய நிலையில், தில்லை நடராசப் பெருமானே அந்தண உருவில் வந்து ஏட்டினில் எழுதி, நூல் நிறைவாக "**திருச்சிற்றம்பல முடையாள் கையெழுத்து**" எனத் திருச் சாத்திட்டுத் தில்லைச் சிற்றம் பல வாயிற்படியில் வைத்து மறைந்தனன்.

14. நூற்பொருள் விளக்கம் வேண்டி நின்ற அந்தணர்க்குக் 'கூத்தப்பெருமானே நூற்பொருள்' எனச் சுட்டிக்கூறி மாணிக்கவாசகர், எல்லோரும் காண, திருமன்றினுள், மறைந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்

எட்டாம் திருமுறை — மாணிக்கவாசகர்
கோயில் மூத்த திருப்பதிகம்-எண் 21

திருச்சிற்றம்பலம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்,
உடையாள் நடுவுள் நீ இருத்தி,
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானல், அடியே(ன்)உன்

அடியார் நடுவு(ள்) இருக்கும்
அருளைப் புரியாய்பொன் அம்பலத்(து)எம்
முடியா முதலே! என்கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே, 1

கருத்து: பரசிவமும் பராசத்தியும் தம்முள் வேறல்லர். பரசிவத்தினது விருப்பத்திற்கு ஏற்பப் பராசத்தி உயிர்களுக்குத் திருவருள் புரிகிறாள், அவள் அறிவுடைப் பொருள்களை அடிமையாகவும் அறிவில் பொருள்களை உடைமையாகவும் கொண்டவள். எனவே 'உடையாள் உந்தன் நடுவிருக்கும்' எனப் பாடுகிறார், மாணிக்கவாசகர். உயிர்களது நலன் கருதிச் சிவசத்தி தொழிற்படும்போது அவளையே தன் வடிவாகக் கொண்டு **அவளுள்** நிற்கிறான், சிவபெருமான். எனவே, 'உடையாள் நடுவுள் நீ இருத்தி' என இசைக்கிறார்.

சிவனும் சத்தியும் என்றுமே பிரியாதவர்கள்-அவர்கள், மெய்யடியார்களது இதயத்தையே தம் இருப்பிடமாகக் கொண்டவர்கள், அத்தகைய சிறப்புடைய சிவனடியார் இதயத்துள்ளும் சிவனடியார் திருக்கூட்டத்து நடுவுள்ளும் இருத்தலாகிய பேறு, யாருக்குக் கிட்டும்; ஒத்த தன்மையுள்ள உயர்ந்தோர்க்கே யன்றோ அமையும்!

எனவே 'அடியேன் நடுவுள் நீவிர் இருவீரும் இருங்கள்' என்றும் 'அடியேனுக்கு, உன் அடியார் நடுவுள் இருக்கும் நற்பேற்றினை முன் நின்று நல்கியருளுக' என்றும் இரந்து, மாணிக்கவாசகர் உள்ளம் உருகிப் பாடுகிறார்.

முன்நின்(று) ஆண்டாய் எனைமுன்னம்,
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்நின்(று) ஏவல் செய்கின்றேன்;
பிற்பட்(டு) ஒழிந்தேன்; பெம்மானே!

என்இன்(று) அருளி வரநின்று
'போந்தி(டு)' என்று விடில்அடியார்
உன்நின்(று), 'இவ(ன்)ஆர்?' என்னுரோ?
பொன்னம் பலத்கூத்(து) உகந்தானே! 2

கருத்து: முன்னர்த் திருப்பெருந்துறையில் நீயே முன் நின்று ஆண்டு கொண்டாய். அடியேனும் ஆட்படமுனைந்து, உன் பின்நின்று குற்றேவல் புரிகின்றேன். ஆயினும் உன் திருவடி சேர்ந்த பழ அடியாரோடு உடன் வாராமல் பிற்பட்டு வருந்தி நிற்கின்றேன்.

இன்று நீ என்னை உன்பால் 'வருக' என திரு அருள் புரியாயாயின், முன்னர் உன்னடி சேர்ந்த அடியவர்கள் 'இறைவனது திருவடி சேர்தற்கு இவனுக்கு என்ன உரிமையும் தகுதியும் உள?' என்று கூறுரோ?

எனவே, அடியேனை விரைந்து உன்பால் அழைத்துக் கொள் என்று மனமுருக இறைஞ்சுகிறுர், மாணிக்கவாசகப் பெருந்தகை.

உகந்தா னேஅன் புடைஅடிமைக்(கு),
உருகா உள்ளத்(து) உணர்விலியேன்,
சகம்தான் அறிய முறையிட்டால்
'தக்க வா(று)அன்(று)' என்னுரோ?
மகம்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்(கு)உன்
முகம்தான் தாராவிடின் முடிவேன்
பொன்அம் பலத்(து)எம் முழுமுதலே! 3

கருத்து: அன்புடைய மெய்யடியாரை நீ விருப்புடன் உன் திருவடியில் சேர்த்துக் கொள்ளுவோன் ஆகவானும் கல்மனப்பட்ட அடியேன் உருகா உள்ளத்து உணர்விலியாகவானும்,

முன்னர் ஆட்கொண்டநீ, என்னைப் பிரிந்து ஆருத் துயரில் விடுத்தனை என்று உலகறிய முறையிட்டால், "அம் முறையீடு தகுதியற்றது" என்று சான்ருேர் அறிவுறுத்துவர்.

முன்னர்ப் பிரிவுத்துயர் ஆற்ருது தீயினில் பாய்ந்தும், நீரினில் மூழ்கியும் உயிர் துறந்தோரையும் நீ உய்வித்தனை. அவ்வாறே நானும் ஆற்ருமையால் உயிர் விடுமுன், நீயே இன்முகம் காட்டி உன் திருவடியின்பால் அடியேனையும் ஏற்றருள வேண்டும் என்று இறைவனை உள்ளம் உருகி வேண்டுகிருர், அடிகள்,

முழுமுத லே,ஐம் புலனுக்கும்,
மூவர்க்கும், என்தனக்கும்
வழிமுத லே,நின் பழஅடி யார்திரன்
வான் குழுமிக்
கெழுமுத லே,அருள் தந்திருக்க
இரங்கும் கொல் லோஎன்(று)
அழு(ம்)அது வேயன்றி மற்(று)என்
செய்கேன் பொன்அம் பலத்(து)அரைசே! 4

கருத்து: சிவபெருமானே ஐந்தொழில் புரியவல்ல தனிப் பெருந் தலைவன்; மூவர்க்கும், யாவர்க்கும் முதல்வன்; அனைத்து அண்டங்கட்கும் ஆதாரம்; அடியேனுக்கும் வழிவழித் தலைவன்; உரிமையுள்ள பழ அடியார்கள் திருக்கூட்டம், தனது திருவடியில் கூடி இன்புற்றிருப் பதற்கு அருள்பாலிப்பவன்.

அவனது திருவடிப் பேற்றினை நெஞ்சுருகி அழுது வேண்டியே பெறுதலல்லால், வேறு யாது செய்ய வல்லேம்? என்று மனங் குழைகிருர், மாணிக்கவாசகர்.

"அரைசே, பொன்னம் பலத்(து)ஆடும்
அமுதே," என்று(உ)ன் அருள்நோக்கி,

இரைதேர் கொக்(கு)ஒத்(து), இரவுபகல்
ஏசற்(று) இருந்தே வேசற்றேன்;[1]
கரை[2]சேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்து(உ)ன் அடியேன்பால்
பிரைசேர்[3] பாலின் நெய்போலப்
பேசா திருந்தால், ஏசாரோ? 5

கருத்து: ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி யிருக்குமாம் கொக்கு என்பது முதுமொழி. அதேபோன்று வகைவகையான சிற்றின்பங்கள் தம் வழியில் வந்து சென்றும், அடியேன், பெறுதற்கரிய பேரின்பத்தை நீ அருளுவாய் என இரவும்பகலும் அடங்கியே யிருந்தேன். அதனால் வருந்தி இளைத்தேன்.

பிரையிட்ட பால், திரிந்து தயிராகி வெண்ணெய், நெய்யாவதுதானே இயல்பு? நீ உன் அடியார்களுள் சிலருக்குக் காட்சி கொடுத்து, நெய்யாக நின்று அருளுகிறாய். அடியேனுக்குப் பிரையிட்ட பால் நிலையிலேயே பேசாதிருக்கின்றாய். இதனைக் கண்ணுறும் நடுவுநிலையாளர் உன்னை ஏசமாட்டாரோ? என மனம் நெகிழ்ந்து வினவுகிறார், மாணிக்கவாசகர்.

ஏசா நிற்பர் என்னை, உனக்(கு)
அடியான் என்று பிற(ர்)எல்லாம்
பேசா நிற்பர், யான்தானும்
பேணா நிற்பேன் நின்னருளே,
தேசா, நேசர் சூழ்ந்திருக்கும்
திருவோ லக்கம் சேவிக்க
ஈசா, பொன்னம் பலத்தாடும்
எந்தாய், இனித்தான் இரங்காயே! 6

1 வேசறுதல் – இளைத்தல்; 2 கரை – பிறவிக் கடலின் கரை, முத்தி; 3 பிரைசேர் – அமுது ஊற்றப்பெற்ற

கருத்து: உனது அருள் ஒன்றையே விரும்பி, நிற்பவன் அடியேன். அவ்வருளைப் பெறுது அடியேன் அல்லல் உறும் காலத்து, உலகத்தவர் நம் இருவரையுமே ஏசாரோ? எனவே அப்பழி நேராவண்ணம், உன் திருவோலக்கம் சேவிக்க இப்பொழுதே திருவருள் புரிவாயாக என்று இறைவனை இறைஞ்சுகிருர், அடிகள். (திருவோலக்கம்—கொலு.)

இரங்கும் நமக்(கு)அம் பலக்கூத்தன்
என்(று)என்(று) ஏமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்(து)ஆண்டாய்;
ஆள்வா(ர்) **இலிமா(டு)** ஆவேனே?
நெருங்கும் அடியார் களும்,நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வர,எங்கள்
வாழ்வே, '**வா**' என்(று) அருளாயே. 7

கருத்து: அன்று, திருப்பெருந்துறையில், அறிதற்கரிய மெய்ப்பொருள் உண்மையை உரைத்து, அடியேனை ஆட்கொண்டாய். பின்னர், விட்டுப் பிரிந்தாய். பயனுடைய பொருளாயினும் பயன்படுத்துவார் இன்றேல் கேடுறு மன்றோ! எனவே, நீயே வாழ்வு எனக் களிப்புடன் இருக்கும் அடியேன், கெட்டு விடாதவாறு, உன்னைச் சூழ்ந்திருக்கும் உன் அடியவர் திருக்கூட்டத்தினுள் அடியேனும் சார்ந்து வரத் திருஅருள் பாலிப்பாயாக என வேண்டி நிற்கிருர், திருவாதவூரர்.
ஏமாந்து—களிப்புக்கொண்டு.

அருளா(து) ஒழிந்தால் அடியேனை
'அஞ்சேல்' என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்(து)ஆண்ட
பொன்னே, பொன்னம் பலக்கூத்தா,

மருளார்[1] மனத்தோ(டு) உனைப்பிரிந்து
வருந்துவேனை, 'வா' என்(று)உன்
தெருளார்[2] கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ? 8

கருத்து: அன்று நீ உள்ளம் புகுந்து என்னை ஆட்கொண்டாய். நீண்ட பயிற்சிவயத்தால் பயக்கம் பொருந்திய அடியேன், உன்னைப் பிரிந்தேன், இன்று வருந்தி நிற்கின்றேன்; 'அஞ்சற்க' எனக் கூறித் தேற்றுவிப்பார் இங்கு யாருமிலர்.

இன்னும் நீ உனது மெய்யடியார் திருக்கூட்டத்திற்குள் என்னை வரவழைத்துக் கொள்ளாயாயின், யான் மீளப் பிறவியில் வீழ்ந்து அல்லலுறுவேனே! அவர்கள் அதுகண்டு எள்ளிநகையாரோ? எனவே உன்பால் என்னை 'வா' என்று அருளுவாயாக, என இறைவனிடம் மாணிக்கவாசகர் வேண்டி முறையிடுகிறார்.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்[1]
திரண்டு திரண்டு (உ)ன் திருவார்த்தை[2]
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே(று) இருந்து(உ)ன் திருநாமம்[3]
தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
தலைவா என்பார், அவர்முன்னே
நரிப்பாய்[4] நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே. 9

கருத்து: உன் திருவடி சேர்ந்த மெய்யடியார்கள், ஈறிலா நிலை பேரின்பத்தில் திளைத்து மகிழ்வர். அவர்கள் ஒருங்கிணைந்து உனது திருப்புகழைப் பாடியும் கேட்டும்,

---

1 மருள்ஆர் தெருளார் – தெளிவுடைய அடியார்.
9-1 தேனிப்பார் - இன்புறுவார். தியானிப்பார் என்றலுமாம். 2 வார்த்தை - திருப்புகழ் 3 நாமம்-திரு ஐந்தெழுத்து 4 நரிப்பு - துன்பத்தால் தாக்கப்படுதல்.

போற்றியும் இன்புறுவர். தனித்தனியே இருந்து, திருவைந்தெழுத்தை உள்ளத்தில் தியானிப்பர். தூய உடம்பினராய் அவர்கள் உன்பால் உவகையுடன் இருக்க, அடியேன் அப்பேறு பெருமையால், நலிவுற்று இருப்பேனோ? எனவே அடியேனுக்கும் அவ்வுயர்பேற்றினை நல்குவாயாக! என வேண்டுகிறார், ஆளுடை அடிகள்.

நல்கா(து) ஒழியான் நமக்(கு)என்று(உ)ன்
நாமம் பிதற்றி[1] நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறு
வணங்கா மனத்தால் நினைந்(து)உருகிப்
பல்கால் உன்னைப் பாவித்து[2]
பரவிப்[3] பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும்[4] உயிர்க்(கு)இரங்கி
அருளாய் என்னை உடையானே. 10

கருத்து: எம்பெருமானே, மனம் மொழி மெய் ஆகிய முத்திறத்தாலும் முறைப்படி உன்னை வணங்கிப் போற்றும் மெய்யடியாரை, நீ திருஅருள் பாவிக்கத் தவறுவதில்லை நீ உறுதியாக அருள்பாலிப்பாய் என்ற சிந்தையோடு, உனது திருப்புகழ் பாடியும், திருவைந் தெழுத்து ஓதியும் கண்களில் நீர்மல்க வாழ்த்தியும், வணங் கியும், 'பொன்னம்பலத்து அரசே' என்று பல்காலும் போற்றியும் புகழ்ந்தும் நிற்கும் இவ்வுயிருக்கு (அடியே னுக்கு) இரங்கித் திருவருள் புரிவாயாக, என அடிகள் அழுதழுது வேண்டுகிறார், அரனது திருவடியை

திருச்சிற்றம்பலம்

10-1 பிதற்றி - ஆழ்ந்த மெய்ப்பொருள் உணராது, அறிந்ததை அவ்வளவில் சொல்லி, 2 பாவித்து - நினைத்து 3 பரவி - துதித்து 4 ஒல்கா நிற்கும் - மெலிகின்ற

உ
சிவமயம்

கோயில் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மாறிநின்(று) என்னை மயக்கிடும் வஞ்சப்
புல(ன்)ஐந்தின்[1] வழியடைத்(து), அமுதே
ஊறிநின்(று), என்னுள் **எழுபரஞ் சோதி**[2]
உள்ளவா காணவந்(து) அருளாய்,
தேறலின் தெளிவே, சிவபெரு மானே,
திருப்பெருந் துறையுறை சிவனே,
ஈறிலாப் பதங்கள் யாவையும் **கடந்த**[3]
இன்பமே என்னுடை அன்பே. 1

கருத்து: 1 வஞ்சப்புலன் ஐந்து : சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்ற ஐந்தும் புலன்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தும் பொறிகள். பொறிகளைப் புலன்கள் இயக்க, புலன்களை மனம் என்ற உட்கருவி இயக்குகிறது.

மனம் என்பது உயிர் என்ற அரசனுக்குத் தலைமை அமைச்சன். உயிர், காப்பியத் தலைவியாயிருக்க, அவளது, தோழியாக அமைவது, மனமாகும். [இதன் விளக்கத்தை **'மருத நிலத்து மங்கை'** என்ற எமது தொல்காப்பியப் பொருள் விளக்க நூற்கண் காண்க.]

உயிர் → மனம் → புலன் → பொறி எனப் பரந்து விரியும் இந்தச் செயற்பாடு, உயிரது புறநோக்காகிய கீழ் நிலை **(objective awareness)** ஆகும். இதனையே ''மாறி நின்று என்னை மயக்கும் வஞ்சப் புலன் ஐந்து' என அடிகள் குறிப்பிடுகிறார்.

2 எழுபரஞ்சோதி : திருவருள் துணையால், உயிருக்குச் சிவகுரு அமைகிறார். அவரது உபதேச வழியில் ஊற்ற

முடன் நிற்கும் உயிர், தன்னை மட்டுமன்றி அணுவாதி அண்டங்களையும் இயக்குபவன், சிவபெருமான் என்பதையும், அவன் உயிருக்குள் உயிராய்ப் பேரொளியாய் நின்று அருள் பாலிக்கிறன் என்பதையும் உணர்ந்து களிபேருவகை அடைகிறது.

உயிர் → மனம் → சிவகுரு அருள் → சிவானந்தப் பேறு எனக்குவிந்து நிற்கும் நிலை, உயிரது உள் நோக்காகிய உயர் நிலை (Subjective experience) ஆகும் *

உயர் நிலைக்கு மாறுன தீ நெறியில் வஞ்சப் புலன்கள் தம்மை மயக்கி அழுத்தி விடுவதாகவும் அவற்றின் கட்டிலிருந்து விடுவித்து, தம் உயிரினுள் ஒளியைப் பெருக்கித் தம்மைக் காத்தருளவேண்டுமென்றும் முதல் இரண்டடிகளில், மாணிக்கவாசகர் இறைவனை மனமுருகி இறைஞ்சுகிருர்.

3 கடந்த இன்பமே : கடவுள் என்பதில் கட என்ற பகுதி, வாக்கு, மனம் முதலிய 96-தத்துவப் படிகளையும் கடந்த, எங்கும் நிறைந்த நிலையையும், உள் என்ற விகுதி, உயிருக்குள் உயிராக உள் நிற்கும் நிலையையும் குறிக்கும்.

உயிர் உடலொடு கூடிக் கருவுற்ற வேளையிலே, பிரமனுல் அடைக்கப்பட்ட தலைவாயில், ஞானகுருவினது அருள் உபதேசத்தால் திறக்கவே கட,உள்(சி,வ) இரண்டும் ஒன்றாகிக் **கடவுள் (சிவ)** என அருள்பாலிக்கிறது.

4 உள்ளவா காணவந்து அருளாய் : குருஉபதேசத்தாலும் தொடர்ந்த இடைவிடாத பயிற்சியாலும் பெறுகிற சிவமாந்தன்மை என்னும் அத்தகு பேரின்பநிலை

---

*மனத்தினை இயக்கியும், சிவகுருவினை அதிட்டித்தும் ஆன்மாவை இறைவன் தன்வயப்படுத்தும் இந்நிலையை முறையே தோழியிற் கூட்டம், பாங்கற்கூட்டம் எனத் தொல்காப்பியம் கூறும்.

யைத்தமக்குக்காட்டியருளுமாறு மன்றுளாடியை மாணிக்க வாசகப் பெருந்தகை மனங்குழைந்து வேண்டுகிறார்

அன்பினா(ல்) அடியேன் ஆவியோ(டு) ஆக்கை
ஆனந்த மாய்க்கசிந்(து) உருக
என்பர(ம்)[1] அல்லா இன்னருள் தந்தாய்
யான் இதற்(கு) இல(ன்)ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே, முடிவிலா முதலே,
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே,
சீருடைச் சிவபுரத்(து)அ ரைசே 2

('முன்புமாய்' முதலியவற்றை முதற்கண் கூட்டி உரைக்கப் பொருள் எளிதாகும்)

கருத்து: எம்பெருமானே! அடியேனது தகுதிக்கு அப்பாற்பட்ட பேரின்பப் பெருங்கருணையை அடியேங்களுக்குத் தந்தருளியிருக்கிறாய். இதற்கு அடியேன், யாது கைம்மாறு செய்ய வல்லேன்? (எ-று)

அரைசனே அன்பர்க்(கு), அடியனே(ன்) உடைய
அப்பனே ஆவியோ(டு) ஆக்கை
புரைபுரை[2] கனியப் புகுந்துநின்(று) உருக்கிப்
பொய்யிருள்[3] கடிந்தமெய்ச் சுடரே[4]
திரைபொரா மன்னும் அமுதத்தெண்[5] கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரைஉணர்(வு) இறந்துநின்(று) உணர்வதோர் உணர்வே
யா(ன்)உன்னை உரைக்குமா(று) உணர்த்தே, 3.

2-1 பரம் - தரம், தகுதி 3-2 புரை - உள்ளறை
3-3 பொய்யிருள் - மலஇருள், அறியாமை 3-4 மெய்ச் சுடர் - அழிவில்லாத, என்றும் நிலையான பேரொளி.
3-5 மன்னும், அமுததெள் என்பன முறையே நிலைபேறு, ஆனந்தம், அறிவு (சத் ஆனந்தம் சித்) என்னும் இறை இயல்புகளைக் குறித்து நிற்பன. மெய்ச்சுடர் என முன்னர்க் கூறியதன் மாற்று வடிவமே இது என்க.

கருத்து; ஆன்மா உலகத்தை உணருவது பாசஞானம்; ஆன்மா தன்னை உணருவது பசு ஞானம். இவ்விரண்டு ஞானங்களாலும் உணரப்படாதவன், இறைவன். இவ்வாறு உரை உணர்வு இறந்து (கடந்து) நிற்கும் அவன், பதிஞானத்தால் மட்டுமே தன்னை உணர்த்தி நிற்கச் செய்பவன்.

மெய்யடியார்களைத் தன்திருவடி வியாபகத்துள் அடக்கி ஆனந்தத்துள் திளைத்திருக்கச் செய்பவன், அவனே (எ–று)

உணர்ந்தமா முனிவர் உம்பரோ(டு) ஒழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப்(பு) அறுக்கு(ம்)எம் மருந்தே
திணித்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா(ம்) இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்(கு) இனி என்ன குறையே. 4

கருத்து: கலைஞானத்தைப் பெற்ற முனிவர்களும், தேவர்களும், மால், அயன் முதலிய பிறரும், அறிவதற்கு அரியவன், சிவபெருமான்; அவன் ஒப்புவமை இல்லாத மேலோன். ஆயினும் எல்லா உயிர்களையும் தன் உடம் பாகக்கொண்டு, உயிருக்குள் உயிராக உறைபவன். அடிய வருடைய பிறவிப்பிணி நீக்கும் மாமருந்து. அறியாமை யில் கிடந்து அலமருவோருக்கு, அங்குப் பொருக்கெனத் தோன்றி அவரை அறிவனுக்கும் ஞானப் பேரொளி.

நம்போன்றூர்க்குள்ள சாத்துவிகம், இராசதம், தாமசம் ஆகிய முக்குணங்களும் இல்லாத இன்ப ஊற்று,

அவன். எனவே அவனை அடைந்தோர் அனைத்து இன்பங்களையும் பெற்றவராதலான், இனிப் பெறுவதற்கு என யாது உளது? (எ-று)

குறைவிலா நிறைவே கோதிலா[1] அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்(து) என்
மனத்திடை மன்னிய மன்னே[2]
சிறைபெறா நீர்[3]போல் **சிந்தைவாய்ப்**[4] பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீ என் உடல்இடம் கொண்டாய்[5]
இனிஉன்னை என்இரக் கேனே[6] 5

5-1 கோதிலா - குற்றமில்லாத; 5-2 மன் - தலைவன்.

கருத்து: (5-3) சிறைபெறாநீர்: அணையிடப் பெறாத வெள்ளம். உண்மை அடியவரது அன்பு உள்ளத்துள், சிவபெருமான் தனது கருணை வெள்ளத்தைப் புகப்பெய்து அருளுகிறான். அவன் பேரின்ப வடிவினன். சிவனது கருணை வெள்ளம், உலகின் எந்த சத்தியாலும் தடுக்க முடியாத பேராற்றலும், தண்மையும் கொண்டது என்பதை அணையிடப் பெறாத ஆற்று வெள்ளத்துக்கு உவமிக்கிறார், அடிகள்.

(5-4) **சிந்தைவாய்:** சித்தத்து இடத்து. ஆன்மா, முன்வினைப் பயன்களை அனுபவித்துத் தொலைப்பதற்காகச் சிவபெருமான், உடல், உட்கருவி, உலகம், நுகர்ச்சி ஆகியவற்றை ஆன்மாவுக்கு அருளுகிறான்.மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன அவனால் அவ்வாறு அருளப்பெற்ற உட்கருவிகள்.

மனம் என்றதும் விரைந்து நினைவுக்கு வருவது, நெஞ்சுத் தானம்; புத்தி என்றதும் மூளைப்பகுதியை யும், அகங்காரம் என்றதும் தலையின் (மூளையின்) கனத் தையும் எண்ணுவது உலக வழக்கு.

சித்தம் என்பது எங்கு உளது? புருவ நடு தொடங்கி உச்சித் தலைவரை நீண்டுயர்ந்த ஒளி பொருந்திய, வாள்போன்ற முன்தலைப் பகுதியே, நெற்றிக்கண், உச்சித் தலையே, செவி, செவி வரை நீண்ட கண் என்றும் வாள்நுதல் என்றும் வண் தமிழ் நூல்கள் வருணிப்பன இவ்விடத்தையே.

இதுவே மனித மனத்தினுள் (நெஞ்சினுள்) சிவபெரு மான் நுழைவதற்கான தலைவாயில், இதுவே, சித்தத் திற்குத் தானம். சிவானுட்டான ஆழ்தியானத்தில் சிந்தை வாய்ப்பாயும் சிவசத்தியது பேராற்றலையும் பெருங்கருணை யையும் உய்த்துணர்ந்து இன்புறலாம்.

5-5 **உடலிடம் கொண்டாய்;** உயிருக்குள் உயிராக நின்று, அதனை இயக்கும் மூலநாயகன், சிவபெருமானே. அவ் உயிருக்கு உடம்பினைத் தந்து, அதனையும் இயக்கு பவன் அவனே! அவன், தனக்கு உடம்பாகக் கொண்ட அட்டமூர்த்தங்களுள் உயிரும் ஒன்று. (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும், சூரிய, சந்திரர் ஆகிய இரண்டும், உயிராகிய ஒன்றும், ஆக எட்டும், சிவபெரு மானது உடம்பாகிய அட்ட மூர்த்தமாம்) எனவே அன்புடைய உயிருக்கு அமைந்த உடம்பு, சிவபெரு மானுக்கும் இடமாயிற்று.

5-6 **என் இரக்கேனே:** உன்பால் வேண்டிக் கொள்ளத் தக்கது, யாது உளது?

இரந்(து)இரந்(து) உருக **என்மனத்** துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்

சிரந்தனில் பொலியும் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகா(ல்)
ஆ(ய்)அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்(டு) இன்றே 6

கருத்து: சிரந்தனில் பொலியும் கமலச் சேவடி. தன்முனைப்பு நீங்கி, பல்காலும் வேண்டி நின்று உண்மையான அன்பு செய்வார் மனத்துள்ளே சிவபெருமான், பேரொளியாய் ஒளிர்கின்றான். மெய்யடியார், தம் சிரத்தினில் தியானமூர்த்தியாய் அவனைக் கூடிக் களித்து இன்புறுவர்.

குறிப்பு: உயிர் இந்த உடல் முழுதும் பரவியிருப்பதாயினும், சிறப்பாக மூன்று இடங்களில் மேம்பட்டு நிற்கும். அவை மனித உடம்பின் 'குறிஞ்சி' யாகிய **தலை** 'மருத' மாகிய **நெஞ்சு**, 'நெய்த'லாகிய **அடிவயிறு** என்பன.

மிக உயர்ந்த பகுதியாகிய குறிஞ்சியும், மிகத் தாழ்வான பகுதியாகிய நெய்தலும் ஆன்மா எனும் அரசனுக்கு **இரு வசந்த மண்டபங்கள்.** அவற்றின் இடைப்பட்ட நெஞ்சுத்தானமாகிய மருத நிலமே **அத்தாணிமண்டபமாம்.** இதனை இருதிறனறிவு இரண்டலா ஆன்மா எனவும் சதசத்து எனவும் சாத்திரங்கள் குறிப்பிடும்.

நெஞ்சினைச் சிவபெருமானுக்குப் **பூசைத்தானமாக**வும் தலையைத் **தியானத்தானமாக**வும், அடிவயிற்றை **ஓம**த்தானமாகவும் சித்தாந்த சாத்திரங்கள் இடம்சுட்டி அறிவுறுத்தும்.

உயர்ந்த பக்குவ நிலையடைந்த ஆன்மா தனது உடம்பின் முன் தலைப்பகுதியில் சிவபெருமானைக் கூடி இன்புறு

கிறது. ஆண்டவன்—ஆன்மப் புணர்ச்சிக்கு இடம், தலை; எனவே அகத்துறையில் 'இடந்தலைப்பாடு' ஓர் சீர்மிகு சொல்லாட்சி யாயிற்று.

இரந்து உருக, எழுகின்ற சோதி: மனம் முதலிய உட்கருவிகள், சிவபெருமானால் உயிருக்கு அருளப்பெற்ற அமைச்சர்கள் (Regents) ஆவர். ஆன்மா எனும் நாயகிக்கு அவர்களே உயிர்த்தோழியர். பக்குவப்பட்டுக் காமஞ் சான்ற உயிராகிய தலைவியைப் புணர்தற்கு, சிவபெருமானாகிய தலைவன் 'மனம்' என்னும் உயிர்த்தோழியையே நெறிப்படுத்துகிறான். இதனையே, **'தோழியிற் கூட்டம்'** எனத் தொல்காப்பியம் கூறும்.

இன்(று)எனக்கு அருளி இருள்கடிந்(து)
உள்ளத்(து)
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற்(று) இன்மை
சென்றுசென்(று) அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்து ஒன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீஅல்லை அன்றிஒன்(று) இல்லை
யார்உன்னை அறியகிற் பாரே. 7

கருத்து: உரிய இக்காலத்தில் நீ என்னை ஆட்கொண்டாய் என்னைப் பந்தப்படுத்தி இருந்த ஆணவ இருளை நீக்கினாய். காலை இளங்கதிரவனாய், என் உள்ளத்தில் ஒளி தோற்றி எழுந்தாய், நினது அப்பெருங்கருணையை அடியேன் இடையீடின்றிச் சிந்தித்து இன்புறுகின்றேன் என மாணிக்கவாசகர், நன்றிப் பெருக்குடன் இறைவனை விளித்துப் பாடுகிறார்.

இந்த உலகப் பொருட்களுள் ஒன்றாக நீ அல்லை. ஆயினும், நீ இல்லாத பொருளே இல்லை. அப்படி இருந்

தும வேருய் நின்று உன்னைக்காண வல்லார் ஒருவரும் இல்லை என ஆசிரியர், இறைவனது தனிப்பெரும் தன்மையைப் பரவித் துதிக்கிருர்.

பாசக்கட்டுகளினின்று படிப்படியாக நீங்கி ஆணவ கன்ம மாயா மலங்கள் சிறிது சிறிதாகத் தேயவே, ஆன்மா **உலகை மறந்திருத்தலேயன்றித் தன்னைத் தானேயும் மறந்து இறைவனையே அனுபவித்து நிற்கும்.** இதையே, ஆண்டவன் ஆன்மா அத்துவிதக் கூட்டு என்று சித்தாந்த ஞானநூல்கள் விளக்கும்.

தலைவன் - தலைவி புணர்ச்சி எனத் தொல்காப்பியர் கூறுவதும் இதுபற்றியே என்க.

பரமசித்தாந்தமாகிய இப்பேருண்மையைக் கூறுதலான், இதனைத் திருவாசகத்தின் '**இருதயமானபாட்டு**' என்பர் அறிஞர்.

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் பட(ர்)ஒளிப் பரப்பே
நீர்உறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யார்உற(வு) எனக்(கு)இங்(கு) ஆர்அயல் உள்ளார்
ஆனந்த(ம்) ஆக்கு(ம்)என் சோதீ. 8

கருத்து: இந்த உலகத்தில் அடியேனுக்கு உறவினர் என்றும் அயலார் என்றும் யாரே உள்ளார். நிலைபேரின்பத்தில் திளைக்கச் செய்பவனுகிய நீயே எனக்கு எல்லாமாய் உள்ளாய் (எ-று)

சோதியாய்த் தோன்றும் உருவமே, அருவாம்
ஒருவனே, சொல்லுதற்(கு) அரிய

ஆதியே, நடுவே, அந்தமே, பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே,
தீதிலா நன்மை திருஅருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகைஎனக்(கு) அருளாய்
வந்துநின் இணையடி தந்தே 9

கருத்து: பாசக் கட்டுக்களை அறுத்தெறிந்து, பரமானந்தத்தில் திளைக்கச் செய்யும் நீ ஒருவனே முழுமுதற் கடவுள். பரம்பொருளாகிய நீ அருளிச் செய்யும் நன்மை ஒன்றே, தீமை கலவாத முழு நன்மையாகும். எனவே, நின் திருவடிப் பேற்றினை நல்கி, அடியேன் உய்வதற்கான உயர்நெறி ஒன்றை அருள்வாயாக. (எ-று)

தந்தது(உ)ன் தன்னைக் கொண்டதுஎ(ன்) தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்!
அந்தம் ஒன்(று) இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற(து) ஒன்று என்பால்!
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே! ஈசா! உடலிடம் கொண்டாய்;
யான் இதற்(கு) இலன் ஓர்கைம் மாறே 10

திருச்சிற்றம்பலம்

கருத்து; உண்மையான சிவனடியார்க்குச் செய்கின்ற நன்மை தீமைகள், சிவபெருமானுக்கே செய்தவையாகும். சிவபெருமான் அடியவரது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தனது என ஏன்றுகொள்கிறான். அவர்தம் இன்ப துன்ப இடர்ப்பாடுகளைத் தனதாகவே கொண்டு அவர்களைக் காக்கிறான். ஆவியை அர்ப்பணித்தவர்க்கு, அவன் தன்னையே பரிசாகத் தருகிறான். அவரது சிந்தையையே, தனக்கு உறைவிடமாகக் கொள்ளுகிறான்.

சிறுமை நிலையில் உள்ள உயிர்களை அவனுக்குக் கொடுத்து நிலைத்த பேரின்பமாகிய அவனை உயிர்கள் பெறுகின்றன. ''இப்பண்டமாற்றில், ஆன்மா பெற்றது அந்தம் ஒன்றில்லா ஆனந்தம்; ஆண்டவன் பெற்றது யாது? ஒன்றுமில்லை. ஆதலின் இருவருள் திறன்மிக்கார் யார்?'' என வஞ்சப்புகழ்ச்சியாக, இறைவனது கைம்மாறு கருதாப் பெருங்கருணைத் திறத்தை மாணிக்கவாசகர் போற்றி வாழ்த்துகிறார்.

திருச்சிற்றம்பலம்

கண்டபத்து - மாணிக்கவாசகர்

தில்லைச் சிற்றம்பலத்தில் நடராசப் பெருமானது திருக்கூத்தைக் கண்டு பேரின்பத்தில் திளைத்த திருவாதவூரர், அருட்பெருக்கில் பாடியருளிய பத்துப் பாடல்களின் தொகுதி.

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வய(ம்)மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை
கண்டேனே. 1

கருத்து: தில்லையுள் அந்தமிலா ஆனந்தத்தைக் கண்டு கொண்ட திருவாதவூரர், வாழ்வின் இரு துருவங்களைத் தெளிவாக விளக்குகிறார்.

பொறி புலன்களுக்கு அடிமைப்பட்டுப் புறஉலகத்தையே நோக்கி இருந்து, பிறப்பதும்இறப்பதுமே தொழிலாகக் கொண்டு, மேல்கீழ் உலகங்களிலேயே அலைந்து திரிவது, ஒரு அவலவாழ்வு.

சிவஞான குருவினது திருவடித் துணைகொண்டு, தெளிந்த மனத்தை உள்முகமாக்கி, உயிருக்குள் உயிராக ஒளிவிட்டு நிற்கும் ஈறிலா நிலை பேரின்பத்தைக் கண்டு, **சிவமாம் தன்மை**யில் களிபேருவகை பெறுவதே, உயரிய வாழ்வு.

அழியும் புற உலகப் பொருட்களுள் அழுந்தி மயங்காமல், நிலையான உள்ளொளியைக் கண்டு இன்புறுவதே சிறப்பு. வாழ்வில் உயர்வும் உய்வும் விரும்புவோர், கொள்ளவேண்டிய தலையாய கடன் இது என்பது உட்கிடை.

வினைப்பிறவி[1] என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே[2] தளர்வெய்திக்
கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்(டு)என் பிறப்(பு)
அறுத்த இணையிலியை[3]
அனைத்து(உ)லகும் தொழும்தில்லை அம்பலத்தே
கண்டேனே. 2

கருத்து:[1] **வினைப்பிறவி** - இறை உணர்வின்றிச் செய்யப் பெறுவன வினைகளாம். அவற்றை நல்வினை, தீவினை எனப் பொதுவாக இருவகைப்படுத்துவர்.

(வினைபற்றிய விளக்கங்களைக் 'கடவுள் ஒருவரா பலரா' என்ற எமது கட்டுரைத் தொகுப்பு நூலில் **வினையும் பயனும்** என்ற தலைப்பில் காண்க)

செயல்கள், செய்த உடனேயே மறைந்து விட அவற்றின் நுண்ணிய தன்மை, புண்ணிய பாவங்களாகச் சிவனது மாயா சத்தியின்பால் பதிவாகின்றன. அப்பதிவு ஏட்டின் படியையே தலை எழுத்து என வழங்குகிறோம். அனுபவிக்கத்தக்க பருவ முதிர்ச்சிக்காலத்தில் இப் புண்ணிய பாவங்கள் இன்ப துன்பங்களாக மாற்றப்பட்டு

சிவபெருமானது திரு ஆணையேற்ற அவனது சத்தியால் அவ்வவ் வினைக்கு ஈடான பிறப்பு, வாழ்வு, முடிவு என்ற வாறு உயிருக்கு ஊட்டப் பெறுகின்றன. இன்பமான தேவ வாழ்வும், துன்பம் நிறைந்த நரக வாழ்வும் மேல்கீழ் உலகங்களில் அமைகின்றன. இரண்டும் கலந்த வாழ்வுக்கு இடம், கர்மபூமி எனப்பெறும் இப்பூவுலகமாகும். பழவினைக் கழிவோடு, புதுவினை ஈட்டமும் இங்குத்தான் நிகழுகின்றது.

இவ்வாறு வினையே பிறப்புக்கு வித்தாகவும். பிறப்பே வினை ஈட்டத்துக்கு ஆதாரமாகவும் சங்கிலித்தொடராக அமைகிறது. இவை பாடலின் முதலடிக்கருத்து.

2. **தனைச் சிறிதும் நினையாதே:** ஒரு செயலைச் செய்யும் போது, நிறைவான சிவசிந்தனை வேண்டும். உயிர் அவனது அடிமை என்றும் உயிரற்றன அவனது உடைமை என்றும் உணர்தல் வேண்டும். ஒவ்வொரு செயலின் உள்ளீடான விருப்பம், அறிவு, செயற்பாடு அனைத்தும் நமதன்று எனவும் சிவனது எனவும் கொள்ளு தல் வேண்டும். அவ்வாறு கொள்ளுதலே, உலக வாழ்வி லுள்ள தளர்வினைப் போக்கவல்லது.

3. **இணையிலி:** சிவபெருமானே ஒப்புவமை இல்லாத தனிப்பெருங்கடவுள். இதற்கு மாறான கருத்து உடையவர்கள் புறத்தார் என்பதைச் சிவபுராணத்தில் அடிகள் அறிவுறுத்துகிறார்.

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்(து)என் உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி[1] மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தி[2]யினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே 3

1 திருத்துருத்தி - (தஞ்சைமாவட்டம்) திருத்தலம்.
2 அருத்தி - விருப்பம்)

கருத்து: உருவம் முழுமை பெறாத கரு நிலையிலேயே உயிரினுள் புகுந்து மனம் என்னும் நுண்ணிய உட்கருவி மூலம், இறைவன் நம்மை இயக்குகிறான். இது யாவர்க்கும் பொதுவான நிலை. ஆயினும் அவன் சிலரது உள்ளத்தையே திருத்திச் சிவமாக்குகிறான்; காரணம், அவர்கள் முன்னைப் பிறப்புகளில் அவ்வாறு வேண்டி உருகி நின்றமையால் என்ப.

எனவே, அடுத்தடுத்த பிறப்புக்களிலாவது நாமும் சிவமாந்தன்மை பெறுதல்வேண்டி, இப்பிறப்பிலிருந்தே சிவானுட்டானம், சிவபூசை முதலிய சிவநெறி நிற்கத் தொடங்குவோமாக என்பது உட்கிடை.

கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி இருக்கும்
வண்ணம்
பல்லோரும் காணஎன்தன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே
கண்டேனே. 4

கருத்து: அடியேன், அருள்நூல்களை முழுமையாகக் கல்லாதவன்; மனிதர்க்குள்ள இயற்கையான சிற்றறிவினையே உடையவன் எனவே, கீழானவன்.

அத்தகைய என்னைத் திருப்பெருந்துறையில், எம்பெருமானே வலிய வந்து ஆட்கொண்டருளினான். யான் எனது என்னும் பசுஞான, பாசஞானங்களை அறுத்து, சிவமாந் தன்மை என்னும் பதிஞானம் புகப் பெய்து, ஒளி ஏற்றினான்.

பேரருளாளனாகிய அவனைத் தில்லை அம்பலத்துள் கண்டு கொண்டேன் (எ-ம்)

சாதிகுலம் பிறப்(பு)என்னும் சுழிப்பட்டுத்
தடுமாறும்
ஆத[1]மிலி நாயேனை அல்லல்(ல்)அறுத்(து)
ஆட்கொண்டு
பேதை குணம் பிறர்உருவம் யா(ன்)என(து) என்
உரை[2]மாய்த்துக்
கோதி(ல்)அமு(து) ஆனானைக் குலவுதில்லை
கண்டேனே. 5

கருத்து: ஒழுக்கத்தாலும் உயர்குடிப் பிறப்பாலும், அதன் உட்பிரிவுகளாலும் உயர்வுதாழ்வு கற்பித்துத் தருக்கித் திரிவது மனிதனது இயல்பு. அதனால், உற்றார் என்றும் அயலார் என்றும் வேற்றுமைப் படுத்தியும், யான் என்ற அகங்காரமும், எனது என்ற மமகாரமும் கொண்டு செருக்குற்றுத் தடுமாறுகிறான், மனிதன்.

ஆய்ந்து நோக்கின், சிவபெருமான் ஒருவனே யன்றி, உலகினில் யாரே நமக்கு ஆதரவு?

''தீயனவற்றைச் சார்ந்தும், சிறந்து உயர்ந்தவற்றைக் கருதாமலும் பேதையாய் அவலத்துள் அழுந்திக் கிடந்த என்னைச் செருக்கறுத்து ஆட்கொண்டான் சிவபெருமான்; அவனைத் தில்லையுள் கண்டு இன்புறுகிறேன்'' என அமைகிறது. மாணிக்கவாசகரது இத்திருப்பாடல்.

பிற[3]விதனை அறமாற்றிப் பிணிமூப்(பு)என்(று)
இவைஇரண்டும்
உறவினொடும் ஒழியச்சென்(று) உலகுடைய
ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்
பலம்மன்னி[4]
மறையவரும்[5] வானவரும் வணங்கிட நான்
கண்டேனே 6

---

1 ஆதம்-ஆதரவு. 2 உரை-செருக்குச்சொல். 3 பிறவி-பிறவிக்குக் காரணமாகிய மயக்கஉணர்வு. 4 மன்னி-பொருந்தி. 5 மறையவர்-மறை ஓதும் தில்லைவாழ் அந்தணர்

பத்திமை[1]யும் பரிசு[2](ம்)இலாப் பசுபாசம்
அறுத்தருளிப்
பித்தன்இவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்த(ம்)[3]எனும் திண்கயிற்றல் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனுர் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே 7

கருத்து: நான் என்ற அகங்காரம் இருக்கும் வரை தனிப்பெருங் கடவுளாகிய சிவபெருமானது தலைமையின் பால் ஆன்மாவுக்கு உன்மையான அன்பு எழுவதில்லை. எனது என்ற மமகாரம் இருக்கும் வரை இறைவனைப் பரவித் துதிக்கின்ற பக்குவம் வருவதில்லை. இவ்விரண்டினை யும் அறுத்து, உயிரைத் தன் திருவடி ஒன்றையே பற்றுக் கோடாகக் கொண்ட பித்தனுக ஆக்குகிருன், சிவபெரு மான். அவன், உயிரின் உள்ளத்தை விட்டுப் பேராமல் உள்ளேயே நிலைபெற்று நிற்கிருன். உள்ளம் மாறுபடாத வாறு,உறுதியான சித்தத்தை அருளி அவன் திருவடிகளையே எஞ்ஞான்றும் சிந்தித்து நிற்கும் பேற்றினை நல்குகிருன். இத்தகைய ஞானப்பேரொளியான திருநடனத்தைத் தில்லைச்சிற்றம்பலத்தில் கண்டு இன்புறுவதாக அடிகள் பாடுகிருர்.

அளவிலாப் பாவக[4]த்தால் அமுக்குண்(டு)இங்(கு)
அறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனு[5]ய்க்
கிடப்பேனுக்(கு)
அளவிலா ஆனந்தம் அளித்(து)என்னை ஆண்டானைக்
களவி[6]லா வானவரும் தொழுந்தில்லை கண்டேனே 8

---

1 பத்திமை-அன்பு. 2 பரிசு-பக்குவம்; தகுதி
3 சித்தம்-மறவாத மனம்.
4 பாவகம்: தன்மம், ஞானம், வைராக்கியம் ஐஸ்வரியம் முதலிய அளவிலா உள்ளப் பண்புகள், உலகியலில் உயிரினை அழுத்துபவை.
5 வெறுவியன் - ஒருபயனும் இல்லாதவன்
6 களவு - நல்லோரை வஞ்சித்தல்

கருத்து: ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்ற ஐந்தும் உயிரைப் பிணித்து நிற்கும் தளைகள் அவை ஒவ்வொன்றும் ஆற்றல் பல கொண்டவை.

ஆணவம், உயிரது அறிவினை விளங்கவொட்டாது மறைப்பது; மாயேயமாகிய உலகியல் வாழ்வின்கண், பின்விளைவு பற்றிய சிந்தனை செய்யவொட்டாது, ஆன்மாவைக் கருமம் (வினை) செய்யத் தூண்டுவதும் ஆணவமே. மயக்கும் இயல்புடைய மாயையின் கூறுகளையே தனக்கு உடம்பாகவும், உட்கருவியாகவும், உலகமாகவும் நுகர்ச்சியாகவும் கொண்ட உயிருக்கு, (தன்னை மறைத்துக் கொண்டு) வினைப்பயனை ஊட்டுவது திரோதாயி.

அவ்வாறு கட்டுண்டு திணறும் ஆன்மா, கடவுளுடன் கூடி இன்புறுதலாகிய நற்பேற்றினைச் சிந்திப்பதில்லை.

அத்தகைய ஆன்மாவையுங்கூடப் படிமுறை வளர்ச்சியில் ஆட்கொண்டு, ஞானத் தெளிவூட்டுகிறான், சிவபெருமான்.

ஆன்மாவுக்கு இவ்வாறு அளவிலா ஆனந்தம் அளிக்கும் பெருமானைத் தில்லைச் சிற்றம்பலத்தில் கண்டு களிக்கிறார், மாணிக்கவாசகர்.

பாங்கி[1]னொடு பரிசொ[2]ன்றும் அறியாத நாயேனை
ஓங்கி உளத்(து) ஒளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கி[3]வினை மலம்அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே
கண்டேனே 9

---

9. 1 பாங்கு-நன்மை. 2 பரிசு-அதனை அடையும் முறை
3 வினை வாங்கி-வினையை நீக்கி. 10 கேதங்கள்-துன்பங்கள்.

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப்
பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளிரொளியை
மரகதத்தை
வேதங்கள் தொழு(து)ஏத்தும் விளங்குதில்லை
கண்டேனே. 10

திருச்சிற்றம்பலம்

உலக பேதங்கள் பலநூறுகோடி அவை ஒவ்வொன்றி லும் இறைவன் கலந்திருக்கிறான்; எனினும் அவன் தனது தனிப்பெருந் தன்மையினின்று மாறுபடாத பெருமை யினன்; எனது குற்றங்களைக் கெடுத்து என்னை ஆட் கொண்டவன்; வேதங்கள் போற்றிப் பரவும், இப்பரம் பொருளைத் தில்லைச் சிற்றம்பலத்துள் கண்டு களிபேருவகை எய்துகிறேன். (எ-ம்)

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

திருக்கோவையாரும் திருத்தில்லையும்

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்

தமிழிலக்கியங்களுள் கோவை என்ற நூல் வகையும் ஒன்று. கோவை என்பதன் பொருள் கோர்த்து வைக்கப் பட்டது என்பதாம். ஐந்திணைகளையும் நிலைக்களனாகக் கொண்டும், அகப்பொருள் துறைகள் அனைத்தும் இடம் பெற்றும் வருவது இக்கோவையாகும். இதற்கென அமைந்த யாப்பு, கட்டளைக் கலித்துறையாகும். இவ்வாற்றான் இக்கோவை ஐந்திணைக் கோவை என்றும், அகப்பொருட்கோவை என்றும், கோவைக் கலித்துறை என்றும் பெயர் பெறலாயின.

இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் வைத்துக்கூறும் பொருளமைதி திருமுறைகளில் மிகுதியும் காணப்படுவதொன்றாகும். ஆயினும், நூல் முழுமையும் அந்நிலையில் அமைந்து விளங்குவது, மாணிக்கவாசகரின் இக்கோவையேயாம். இறைவன் பெயரால் அமைந்த கோவைகளுள் காலத்தானும் சீலத்தானும் முதன்மை பெற்று விளங்குவது இத்திருக் கோவையாராகும். 'திரு' என்னும் அடைமொழி முன்னும் 'ஆர்' என்னும் அடை மொழி பின்னும் புணர்க்கப் பட்டு அழைக்கப் பெறுவது இந்நூற்கு அமைந்த சிறப்பாகும். மேலும் இந்நூற்குப் பேராசிரியரின் உரை அமைந்துள்ளமை தனிச்சிறப்பாகும்.

திருக்கோவையாரும் திருத்தில்லையும்:

பாட்டுடைத் தலைவனாகிய இறைவன், திருக்கூத்து இயற்றும் திருவருள் நிலையமாகிய திருச்சிற்றம்பலத்தின் சீர்த்தியினை, மாணிக்கவாசகர் தம் கோவையில் பல்வேறு இடங்களில் குறித்துள்ளார். அங்ஙனம் குறிப்பிடும் தில்லைச்

சிற்றம்பலம் இறைவனுடனும் இயற்கையுடனும் களவு, கற்பு எனும் பொருள் நிகழ்வுடனும் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது, இறைவனுடன் இயைபுபடும் தில்லை இருநூற்று நாற்பத்திரண்டு பாடல்களில் அமைந்துள்ளது.

தில்லையம்பலத்திலே அம்பலவாணர் சந்நிதி தென் திசை நோக்கி அமைந்துள்ளமையினைத் 'தென்மாத் திசை வசை தீர்தரத் தில்லைச்சிற் றம்பலத்துள் என்மாத் தலைக் கழல் வைத்தெரி யாடும் இறை' (338) எனும் பகுதியும், தில்லையில் பதஞ்சலி முனிவர் தொழுது போற்ற இறைவன் ஆடல் காட்டியருளிய அற்புத நிகழ்ச்சியை,

'நாகந்தொழ வெழிலம்பலம் நண்ணி நடம் நவில்வோன் (171) எனும் பகுதியும், தில்லையிற் கூத்தப் பெருமானை மூவாயிரவராகிய அந்தணர்கள் ஒருங்கே குழுமி நாளும் பூசனை செய்து வழிபடும் முறையினைத் 'தில்லையம்பலத்து மூவாயிரவர் வணங்க நின்றோனை' (72) எனும் பகுதியும், தம் காலத்தில் தில்லையம்பலத் திருமுற்றத்திலே திருமால் அறிதுயிலமர்ந்த கோலத்தில் திருவுருவமைக்கப்பெற்றிருந்த செய்தியினை,

'வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே (86) எனும் பகுதியும் விளக்குகின்றன. இப்பாடற்பகுதி தில்லையில் கோவிந்தராசப் பெருமானுக்குக் கோவில் அமைத்த பின்னே இந்நூல் எழுந்ததற்குச் சான்றுகிறது என்பர்.

தில்லைச்சிற்றம்பலத் திருக்கோயிலில் வழிபாட்டுக் காலங்களில் நாள்தோறும் குடமுழா முழக்கப் பெறும் நிகழ்ச்சியினைச்

'சிற்றம் பலத்தடியேன், களிதரக் கார்மிடற்றான் நடமாடக் கண்ணார் முழவம், துளிதரற் காரென ஆர்த்தன' (324) எனும் பகுதியும், தில்லைக்கோயிலில்

நிகழும் சிறப்புடைய திருவிழாக் காலங்களில் இராப் பொழுது பலநிற மணிமாலைகளின் ஒளியாலும், பலவாக ஏற்றப்பட்ட விளக்குகளாலும், இருள் நீங்கிப்பகற் பொழுது போன்று விளங்கிய திறத்தினை,

'இன்றைவார் பொழிற்றில்லை நகர் இறைசீர் விழவிற் பன்னிறமாலைத் தொகை பகலாம் பல்விளக்கிருளின்' (175)' எனும் பகுதியும், அக்காலத்தில் பாண்டி நாட்டினையும் சோழ நாட்டினையும் ஆண்ட பெருவேந்தனாகிய வரகுண பாண்டியன், தில்லையம்பலப் பெருமானை மகிழ்ந்து போற்றும் பெருவேட்கையுடையனாய் அன்பினால் ஏத்தி வழிபட்ட செய்தியை 'வரகுணனாந் தென்னவனேத்து சிற்றம்பலத்தான் (306) 'சிற்றம் பலம்புகழும், மயலோங் கிருங்களியானை வரகுணன்' (327) எனும் தொடர்களும் விளக்குகின்றன.

இறைவன், கயிலையை யெடுத்த இராவணனைத் தன் திருவடிப் பெருவிரலொன்றினால் ஊன்றி மலைக்கீழ் அடர்த்தருளிய செய்தி, 'இலங்கையர் கோன்மலைக்கீழ் விழச் செற்ற சிற்றம்பலவர்' (59), வாள் அரக்கன் புயந்தலை தீரப் புலியூர் அரனிருக்கும்' (383) எனும் பகுதிகளும், பகன் என்னும் ஆதித்தனது கண்ணைக் குருடாக்கிய செய்தி 'பகன் தாமரைக்கண் கெடக் கடந்தோன்' (184) 'சீர் அருக்கன் குருட்டின் புகச் செற்றகோன்' (270) எனும் பகுதிகளும், சலந்தரனைத் தலையரிந்த செய்தி 'கம்பஞ்சிவந்த சலந்தரன் ஆகங் கறுத்த தில்லை நம்பன்' (209) எனும் பகுதியும் விளக்கு கின்றன. இவற்றால் இறைவனின் வீரச் செயல்கள் பலவும் விளங்குகின்றன. மேலும் திருமால் ஆயிரங் கைகளால் ஆயிரந் தாமரை மலர்களைக் கொண்டு நாள்தோறும் சிவபெருமானைப் போற்றிசைத்த செய்தி,

'அலராயிரந் தந்து வந்தித்து மாலாயிரங்கரத்தால் அலரார் கழல் வழிபாடு செய்தார்' (பா-180) என்ற பகுதியாலும், முருகவேள் சூரபதுமனை அழித்தருளியது, 'வன்சூர்தடிந்த அயில் இது அன்றே' (பா-285) என்ற பகுதியாலும், திருமால் நரசிங்கமாக வந்தது, 'ஆளரிக்கும் அரிதாய தில்லை' (பா-225) என்ற பகுதியாலும் குறிக்கப் பெறுகின்றன. இவை இந்நூலிலிருந்து அறியத்தகும் புராணச் செய்திகளாம்.

இத்திருக்கோவையில் மெய்யுணர்வுக் கொள்கைகளும் ஆங்காங்கு சிறந்து விளங்குகின்றன. சிவபெருமானுடன் ஒன்றுயுள்ள பராசத்தியை 'யாவையுமாம் ஏகம்' என 71-ஆம் திருப்பாடலிலும், பாசமாகிய தளையிற்பட்டுக் கிடத்தல் உயிரியல்பு என்பதும் உயிர்களின் பாசத் தளையறுத்து ஆண்டு அருள்புரிதல் இறை இயல்பென்பதும் ஆகிய உண்மைகளைப் 'பாசத்தளையறுத்து ஆண்டு கொண்டோன்' என்ற 115-ஆம் பாடலிலும், சிவத்தைத் தலைப்பட்டு இரண்டறக்கலந்த உயிர் மீளவும் அதனைவிட்டு நீங்கிப் பிறவியுட் புகுதல் இல்லை என்பதனைப் 'புகுநர்க்குப் போக்கரியோன்' என 188-ஆம் பாடலிலும், இறைவனது அருள் பெற்ற அடியார் திறம் எங்கும் பரவி யாண்டுமாய் இருக்கும் எனும் மெய்ம்மையினை, 'அம்பலத்தோன் எல்லை செல்குறுவோர் நலம் பாவியமுற்றும்' என 197-ஆம் பாடலிலும் குறித்துள்ளார்.

இயற்கையும் தில்லையும்:

சிற்றம்பலத்தைத் தன்னகத்தே கொண்ட தில்லைப்பதி, சோலையும் தடாகமும் சேணுயர்மதிலும் அதனையொட்டிய அகழும், பொன்னிப் புனல் பாயும் கால்வாய்களும் வயல்களும் புடைசூழப் பெற்றதாய், உப்பங்கழிகளும் அவற்றை யடுத்துள்ள கடற்கரைச் சோலையும், கடலும் அணுகப் பெற்றதாய் அமைந்துள்ள தோற்றத்தினைக்

'குருநாண் மலர்ப் பொழில் சூழ்தில்லை' (44), 'புலியூர்ப் பழனத்து அகன்தாமரை யன்னம்' (184) எனவும் 'பொன்னி வளைத்த புனல்சூழ் நிலவிப் பொலிபுலியூர்' (317) எனவும், 'வடிவார் வயிற்றில்லை' (139)' வயல் கொண்ட தில்லை மல்கூரர்'(386) எனவும், 'புலியூர் ஓங்கணை மேவிப் புரண்டு விழுந்தெழுந்தோலமிட்டுத் தீங்கணைந்து ஓர் அல்லுந்தேருய் கலங்கிச் செறிகடலே (179) எனவும் குறித்துள்ளார். இங்குப் 'புலியூர் ஓங்கணைமேவி' என்ற பாடலடியால் அக்காலத்து அணையிட்டு நீரைத் தேக்குமளவு, நீர் வளமும், 'தில்லையின் வாய்த்தூண்டி லெடுத்தவரால் தெங்கொடெற்றப் பழம்விழுந்து பாண்டி லெடுத்த பல்தாமரை கீழும் பழனங்களே' (249) என வரும் பகுதியால் நிலவளமும் செல்வவளமும் தெரிகின்றன. இவ்வாற்ருன் தில்லைப் பதியானது தள்ளா விளையுளும் தக்காருந் தாழ்விலாச் செல்வரும் பெற்றுச் சிறப்புற்றி ருந்தமை விளங்குகின்றது.

பொருள் நிகழ்வுடன் தில்லை:

தலைவன் தலைவியைப் பாராட்டும் பொழுதும், தலைவி தலைவனைப் பாராட்டும் பொழுதும் தில்லையுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். 'அம்பலத்து என் ஆவியன்னுன்' (37), தில்லையின்னொளி போன்றவன் தோள்' (109) 'சிற்றம்பலம் அன்ன அருளான்' (363) 'தில்லைசூழ் கடற் சேர்ப்பர்' (277) எனத் தலைவனோடும், 'சிற்றம்பல மனையாள்' (346), (374) 'அம்பலமே போல் இத்திரு நுதலாள்' (318) 'தில்லையன்ன மணங்கொளஞ் சாயல்' (235) 'தில்லை மாநகர் போலும் வரிவளையே' (257) எனத் தலைவி யோடும் இயைபு படுத்திப் பேசப்படுவன இவ் உண்மையை விளக்கும்.

அகத்தமிழ்க்கோவையாகிய இந்நூலில் உரையாடும் இயல்பினராகிய தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலிய அனைவரும் இந்நூலின் பாட்டுடைத் தலைவனுகத்

திகழும் தில்லை யம்பலவனாகிய இறைவனுடைய திருவடிகளில் அழுந்திய பேரன்பினராய், அம் முதல்வனுக்குத் தொண்டராய் ஒழுகும் சிவபத்திச் செல்வராய்த் திகழ்கின்றார்கள். இவ்வுண்மை, அவர்கள் தத்தம் உரையாடல்களில் தில்லையம்பலப் பெருமானுக்கும் தமக்கும் உள்ள ஆண்டானடிமைத் தொடர்பினைக் குறித்துச் சொல்லுதலால் நன்கு அறியலாம்.

பத்தியராகிய அடியார்களைத் தலைவிக்கும் அம்பலவனைத் தலைவனுக்கும் உவமித்துக் கூறும் செய்தி,

‘புலியூ ரம்பலவர்க் குற்றபத்தியர் போலப்பணைத்திறு மாந்த பயோதரத்தோர் பித்தி தன் பின்வர முன்வருமோவொர் பெருந்தகையே’ எனும் பாடற் பகுதியாலும். (242)

‘புலியூர், ஒருவனது அன்பரின் இன்பக் கலவிகள்
உள்ளுகத் தருவன செய்தெனதாவி
கொண்டேகியென் நெஞ் சிற்றம்மை
இருவினகாதலரேது செய்வானின்றிருக்
கின்றதே’’ (பா-281)

எனும் பாடற் பகுதியிலும் கூறியுள்ளார்.

இத்திருக் கோவைக்கண் குறிப்பிடப்படும் தில்லைப் பதியானது அம்பலம், சிற்றம்பலம், புலியூர், தில்லைச் சிற்றம்பலம் எனக் குறிக்கப்படுகின்றதேயன்றி எவ்விடத்தும் ‘சிதம்பரம்’ என்ற சொல் இடம் பெறவில்லை. எனவே சிதம்பரம் என்று அழைக்கப்பட்டது மிகப் பிற்காலத்தே என்று அறுதியிட்டுக் கூறலாம்.

நிறைவுரை:

நூலினை எவ்வாறு சிறப்புற நிறைவு செய்வது என்ற சிந்தனையோடு, சிற்றம்பல தரிசனத்திற்குப் புறப் பட்டேன்.

முன்னொரு நாள், மாணிக்க வாசகப் பெருமானைப் "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" எனப் பணித்தான், பரமன்; திருவாசகத்தைத் தொடர்ந்து திருக்கோவையார் எழுந்தது.

'திருக்கோவையாரும் உளதோ?' என்ற வினவோடு, இன்று தில்லையம்பதியில் எதிர்ப்பட்டனர், பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்கள்.

முன்னொருகால், தம்பிரான் தோழரான சுந்தர மூர்த்தி சொற்றமிழ் பாடி அம்மையப்பனை அருச்சித்தார்.

அவரைப் போன்றே இஞ்ஞான்று, நானிலம் போற்றும் நற்றமிழ் ஆசானக நம்பனைப் பரவி நிற்பவர், கு. சுந்தரமூர்த்தி அவர்கள். சொல்லிலும், பொருளிலும், உருவிலும், திருவிலும் இனிய சுந்தரரே இவர்.

இவர்களது அன்பின் வெளிப்பாடே "திருக்கோவை யாரும் திருத்தில்லையும்" என்ற உயரிய நறுமண மலர். அதனையும் இம் மலர் மாலைக்கண் நிறைவுசெய் மலராக்கி மகிழ்கின்றனம்.

வல்லாளனய் வந்து வலியத் துணைநின்ற இச் சொல்லாளனுக்கு எந்நன்றி என்றும் உரியது.

திருச்சிற்றம்பலம்

அ. சொ. சுப்பையா

மீனாட்சி பிரிண்டர்ஸ், சிதம்பரம்,

உ

சிவமயம்



ஆசிரியரது பிற நூல்கள்
(அச்சில்)

மருத நிலத்து மங்கை
(தொல்காப்பிய அகப்பொருள் விளக்கம்)

கடவுள் ஒருவரா, பலரா ?
(சித்தாந்தக் கட்டுரைத் தொகுப்பு)

உடலியலும் இறையியலும்
(ஓர் ஒப்பு நோக்கு)

அச்சிட்டோர்:- மீனாக்ஷி பிரிண்டர்ஸ், சிதம்பரம்